
a monthly information digest இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி

ஆகஸ்ட் 2015 August | இதழ் 295 ISSUE

# தமிழர் தகவல்

# TAMILS' INFORMATION



ஆரொடு நோகேன்



கலேவலா



நாவலர் விருது

25 வது ஆண்டு 25th Year

Growing with the Community ESTD-1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரிடமிருந்து **From the Editor**

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

ஆரம்பம்
பெப்ரவரி 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

தொலைபேசி
416 920 9250
தொலைநகல்
416 921 6576

மின்னஞ்சல்
tamilsinfo@sympatico.ca

தயாரிப்பு
ஈழத்தமிழர் தகவல் நிலையம்,
ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

வெளியீடு
அகிலன் அசோஷியேற்ஸ்

முதன்மை ஆசிரியர்
திரு எஸ். திருச்செல்வம்

இணை ஆசிரியர்
றஞ்சி திரு

உதவி ஆசிரியர் & தயாரிப்பு
முகாமையாளர்
சசி பத்மநாதன்

உதவி ஆசிரியர்கள்
குயின்ரஸ் துரைசிங்கம்
அனோஜினி குமாரதாசன்

முகாமையாளர்
ஆர். ஆர். ராஜ்குமார்

விநியோக இணைப்பாளர்
இ. சிவலிங்கம்

பொதுமக்கள் தொடர்பு
என். குமாரதாஸன்
ப. சிவசுப்பிரமணியம்
பொன். சிவகுமாரன்

தொழில்நுட்ப உதவி
ஹரன் கிறாஃப்

மாதாந்தம்
5000 பிரதிகள்

ஆண்டு மலர்
6000 பிரதிகள்

# இரட்டைப் பிரஜாவுரிமை ஆபத்தானதா?

கனடாவில் 'இரண்டாம்தரக் கனடியர்கள்' (Second-class Canadians) என்று ஒரு பிரிவினர் உள்ளனரா? அப்படியானால் எப்போது இந்த வர்க்கம் உருவாக்கப்பட்டது?

இந்தக் கேள்விகளுக்கான ஒட்டுமொத்தப் பதிலாக, கடந்த ஜுன் மாதத்திலிருந்து அமுலுக்கு வந்துள்ள சி-24 எனப்படும் புதிய பிரஜாவுரிமைச் (New Citizenshipp law C-24) சட்டத்தை அடையாளம் காட்டுகின்றனர் இத்துறை சார்ந்த வல்லுனர்களும் அமைப்புகளும்.

கனடாவில் இரட்டைப் பிரஜாவுரிமை (Dual Citizenship) பெற்றவர்கள் எவரையாவது பயங்கரவாத அல்லது சதி நடவடிக்கைகள் போன்ற கிரிமினல் குற்றவாளியாகக் காணுமிடத்து அவர்களின் கனடியப் பிரஜாவுரிமையை மீளப்பெறும் அதிகாரம் புதிய சட்டத்தில் கனடிய குடிவரவு அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டிருப்பதே இந்தப் புதிய பிரச்சனை எழுந்ததமைக்கான காரணம்.

முன்னைய பிரஜாவுரிமைச் சட்டத்தின்கீழ், கனடாவில் பிறந்தவரோ அல்லது கனடாவில் குடியேறியவரோ கனடியப் பிரஜாவுரிமையைப் பெறுமிடத்து. அது இரு தரப்பினரிடமும் எந்தப் பாகுபாட்டையும் காட்டாது எல்லோரும் சமத்துவமான, முதலாம் அல்லது இரண்டாம் என்ற பிரிவற்ற கனடியர்கள் என்ற உருத்தை வழங்கியது.

ஆனால், புதிய சட்டம் அதனை இல்லாமற் செய்து, இரட்டைப் பிரஜாவுரிமையுள்ளவர்களைத் தண்டிக்கும் உரிமையைக் கொண்டுள்ளது என்பதே பலராலும் முன்வைக்கப்பட்டு வருகின்ற வாதம். இந்நாட்டில் இரண்டாம்தரப் பிரஜைகள் என்று எவருமில்லை என்று பல தடவை இதற்குப் பொறுப்பான அமைச்சர் கிறிஸ் அலெக்ஸாந்தர் விளக்கியுள்ளாராயினும், அதன் நம்பகத்தன்மை கேள்விக்குரியதாகவே விவாதிப்பவர்களால் பார்க்கப்படுகின்றது.

'கனடியப் பிரஜாவுரிமை என்பது ஒரு உரிமையல்ல, இது ஒரு சலுகை' (Canadian Citizenship is not a right, it's a privilege) என்ற அமைச்சர் அலெக்சாந்தரின் வரிகளை இங்கு சுட்டவேண்டியது முக்கியமாகவுள்ளது.

வரிகளுக்கிடையாக இது சொல்லும் கருத்தானது நேர்மையாகச் செயற்படுத்தப்பட வேண்டிய ஒரு சட்டத்தில், கனடியப் பிரஜாவுரிமையை மட்டும் கொண்டிருப்பவர்களுக்கும், கனடிய பிரஜாவுரிமையோடு இன்னொரு நாட்டுப் பிரஜாவுரிமையுமாக இரட்டைப் பிரஜாவுரிமையைக் கொண்டிருப்பவர்களுக்குமிடையில் வேறுபாட்டை ஏற்படுத்துகின்றது என்பதை கனடிய அரசு புரியாதிருக்க முடியாது.

கனடாவுக்கு வெளியே பிறந்து, கனடா வந்த பின்னர் இங்கும் பிரஜாவுரிமை பெற்ற ஒருவர் (naturalized citizen) அவரது பிறந்த நாட்டில் கிரிமினல் குற்றம் புரிந்தவராக அந்நாட்டு அரசு தெரியப்படுத்துமிடத்து, அவர் தமது கனடியப் பிரஜாவுரிமையை இழக்கும் அபாயம் இப்போது ஏற்பட்டுள்ளது.

ஆனால் கனடியப் பிரஜாவுரிமையை மட்டுமே கொண்டுள்ளவருக்கு இந்த ஆபத்தில்லை. அப்படியென்றால் இது பாரபட்சமான ஒரு சட்டமில்லையா?

இங்கேதான் 'இரண்டாம்தரக் கனடியர்' அல்லது 'இரண்டாம்தரப் பிரஜை' என்ற புதிய வர்க்கமொன்று உருவாக்கப்பட்டுள்ளது என்ற குற்றச்சாட்டை சர்வதேச அமைப்புகளும், ஐ. நாவும் முன்வைக்க நேர்ந்துள்ளது.

'இல்லை இல்லை' என்று மீண்டும் மீண்டும் கூறுவதால், இருப்பது இல்லையென்றாகி விடுமா? அல்லது, இல்லாமல் போய்விடுமா?

திரு எஸ். திருச்செல்வம்

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

**Established**
February 1991

**P.O. Box - 3, Station F**
**Toronto, ON. M4Y 2L4,**
**Canada**

**Tel: 416 920 9250**
Fax: 416 921 6576

**email**
tamilsinfo@sympatico.ca

**Produced by**
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto & Thamil Information Research Unit (THIRU)

**Published by**
Ahilan Associates

**Editor in chief**
Thiru S. Thiruchelvam

**Associate Editor**
Ranji Thiru

**Assistant Editor and Production Manager**
Sasi Pathmanathan

**Assistant Editors**
Quintus Thuraisingam
Anojoni Kumaradasan

**Manager**
R. R. Rajkumar

**Circulation Coordinator**
R. Sivalingam

**Public Relation**
N. Kumaradasan
P. Sivasubramaniam
Pon. Sivakumaran

**Technical Support**
Haran Graph

**Monthly**
5000 Copies

**Annual**
6000 Copies



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடிய நாடாளுமன்ற தேர்தல் கணிப்பு

## என். டி. பி முன்னணியில் லிபரல் மூன்றாவது இடம்

கனடாவின் நாடாளுமன்றத்துக்கான தேர்தல் திட்டமிட்டபடி நடைபெறுமாயின் எதிர்வரும் அக்டோபர் 19ம் திகதி நடைபெறவேண்டும். ஆனால் தற்போதுள்ள நிலைவரப்படி அதற்கு முன்னரே தேர்தலுக்கான அழைப்பை பிரதமர் ஸ்டீபன் ஹாப்பர் விடுக்கலாமென சில ஊடகங்கள் தெரிவித்து வருகின்றன.

கருத்துக் கணிப்பு நடத்தும் பல்வேறு நிறுவனங்களினதும் அறிக்கைகளின்படி தோமஸ் முல்கெயர் தலைமையிலான என். டி. பி ஆட்சியமைக்கும் சாத்தியமுண்டு எனத் தெரிகின்றது. கடந்த மாதக் கடைசியில் வெளியான கருத்துக் கணிப்பொன்று என் டி. பி. சிறுபான்மை அரசே அமைக்குமென்று தெரிவித்துள்ளது.

கன்சர்வேடிவ் கட்சியைச் சேர்ந்த முக்கியமான அமைச்சர்கள் உட்பட இருபது நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடுத்த தேர்தலில் போட்டியிடப் போவதில்லை-யென்று அறிவித்துள்ளனர். சிலர் தங்கள் அமைச்சுப் பதவிகளைத் துறந்து அரசியலிலிருந்து ஓய்வு பெற்றுள்ளனர்.

இதேபோன்று இதர கட்சிகளைச் சேர்ந்த சுமார் பத்து எம். பிக்களும் அரசியலிலிருந்து ஓய்வுபெறும் அறிவித்தலை விடுத்துள்ளனர்.

சகல கருத்துக் கணிப்புகளும் ஜஸ்ரின் ரூடோ தலைமையிலான லிபரல் கட்சி மூன்றாமிடத்துக்கு தள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்து நிற்கின்றன.

தற்போது 303 தொகுதிகளைக் கொண்டிருக்கும் கனடிய மத்திய அரசு, அக்டோபரில் 308 தொகுதிகளாக அதிகரிக்கப்பட்டு தேர்தல் நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. ஒன்ராறியோ மாகாணத்தின் 107 தொகுதிகள் பன்னிரண்டால் அதிகரிக்கின்றன.

அடுத்த தேர்தலில் எந்தக் கட்சியாவது அறுதிப் பெரும்பான்மை பெறுவதானால் 155 தொகுதிகளில் வெற்றிபெற வேண்டும்.

இப்போதுள்ள 303 நாடாளுமன்றத் தொகுதிகளில் கன்சர்வேடிவ் கட்சி 159, என். டி. பி 95, லிபரல் 36, புளொக் கியுபெக்கா 02, பசுமைக்கட்சி 02, சுயேட்சை 08, வெற்றிடங்கள் 04 என்ற எண்ணிக்கையிலுள்ளன.

# பெற்றோரை ஸ்பொன்சர் செய்பவர்களை கடுமையாகப் பாதிக்கும் வகையில் வருமான வரம்பு, பராமரிப்புக் காலம் அதிகரிப்பு

கனடாவில் சட்ட ரீதியாக வசிப்பவர்கள் வெளிநாடுகளிலுள்ள தமது பெற்றோர், அவர்களின் பெற்றோர் (பாட்டன்/பாட்டி), மற்றும் பெற்றோரின் பராமரிப்பிலுள்ள-வர்களை கனடாவில் வசிப்பதற்கு பொறுப்பேற்கும் ஸ்பொன்சர் விதிமுறைகளில் கடுமையான மாற்றம் கொண்டு வரப்பட்டுள்ளது.

வருடமொன்றுக்கு இவ்வகையான விண்ணப்பங்கள் ஐயாயிரம் மட்டுமே ஏற்கப்படுமென்ற கட்டுப்பாடு தொடர்ந்தும் நடைமுறையிலிருக்கும் அதேவேளையில், புதிய விதிமுறை மாற்றங்களும் சேர்ந்து இவ்வகையான ஸ்பொன்சர்களைக் கானல் நீராக மாற்றியிருப்பதாக சம்பந்தப்பட்ட துறைசார் அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன. ஸ்பொன்சர் செய்பவர்களின் குடும்ப மொத்த வருமானம், ஸ்பொன்சரில் வருபவர்களைப் பராமரிக்கும் காலம் ஆகிய இரண்டிலுமே முக்கியமான மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் பத்து வருடங்களாகவிருந்த பராமரிப்புக் காலம் புதிய விதிமுறையின் கீழ் இருபது வருடங்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அதாவது, ஸ்பொன்சரில் வருபவர்களைப் பொறுப்பேற்பவர்கள் அவர்களுக்கு 20 வருடங்கள் தங்கிடம், உணவு. உடை மற்றும் கண்/பற்கள் சிகிச்சைக்கான மருத்துவ வசதி போன்ற அனைத்து வசதிகளையும் வழங்குவதற்கு கனடிய குடிவரவு இலாகாவுடன் ஒப்பந்தம் செய்ய வேண்டும்.

ஏற்கனவே எவரையாவது ஸ்பொன்சர் செய்து அதனை முறித்திருந்தால் (பராமரிக்கத் தவறியிருந்தால்), ஸ்பொன்சரில் வந்தவர்கள் அரசிடமிருந்து பெற்ற பொதுநலப்படி/பராமரிப்பு நிதி ஆகியவைகளை முழுமையாக திருப்பிச் செலுத்தினால் மட்டுமே புதிதாக எவரையும் ஸ்பொன்சர் செய்ய முடியும்.

அடுத்த முக்கிய மாற்றம் குடும்ப வருமானமானது. புதிதாக ஸ்பொன்சர் செய்பவர்கள் கடந்த மூன்று வருடங்களாகத் தொழில் புரிந்தவர்களாகவும், வருமான வரி செலுத்தியவர்களாகவும் இருக்க வேண்டும்.

உதாரணமாக, கனடாவில் வசிக்கும் தனியாள் ஒருவர், தமது தாய், தந்தை ஆகிய இருவரையும் ஸ்பொன்சர் செய்வதானால், 2011ன் வருட வருமானம் 35,976 டாலர்களுக்குக் குறையாமலும், 2012ன் வருட வருமானம் 36,637 டாலர்களுக்குக் குறையாமலும், 2013ன் வருட வருமானம் 37,708 டாலர்களுக்குக் குறையாமலும் இருந்திருக்க வேண்டும்.

ஸ்பொன்சர் செய்பவர்களின் குடும்ப உறுப்பினர்களையும் ஸ்பொன்சர் செய்யப்படுபவர்களின் எண்ணிக்கையையும் சேர்த்த மொத்த எண்ணிக்கையையும், அவர்களின் வருமானத்தையும் விளக்கும் அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

| Size of Family Unit | 2013 Minimum Income | 2012 Minimum Income | 2011 Minimum Income |
|---|---|---|---|
| 2 persons | $37,708 | $36,637 | $35,976 |
| 3 persons | $46,354 | $45,040 | $44,229 |
| 4 persons | $56,280 | $54,685 | $53,699 |
| 5 persons | $63,833 | $62,023 | $60,905 |
| 6 persons | $71,991 | $69,950 | $68,689 |
| 7 persons | $80,153 | $77,879 | $76,475 |
| If more than 7 persons, for each additional person, add | $8,148 | $7,929 | $ 7,786 |

கணவனதும் மனைவியினதும் மொத்த வருமானமே சட்டரீதியாக ஏற்கப்படும். வேறு குடும்ப உறவினர்களின் வருமானம் இங்கு கவனிக்கப்படமாட்டாது.



ஸ்பொன்சார் செய்பவர்களின் சொத்துகள், வங்கி இருப்புகள், எதிர்கால வருமானம் போன்ற எதுவும் அவர்களின் வருடாந்த வருமான-மாகக் கணிக்கப்பட மாட்டாது.●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றஞ்சி திரு

# சின்னச் சின்ன தகவல்கள்

1815 அடி உயரமான கனடிய சி.என் கோபுரம், 39 ஆண்டுகளைப் பூர்த்தி செய்த நிலையிலும் சுற்றுலாப் பயணிகளையும் உள்நாட்டு மக்களையும் ஈர்ப்பதில் முன்னணியில் நிற்கின்றது. 1976ம் ஆண்டு ஜூன் மாதம் 26ம் திகதி இக்கோபுரம் பொதுமக்கள் பார்வைக்காக முதலில் திறக்கப்பட்டது. ஆண்டுதோறும் சுமார் ஒன்றரை மில்லியனுக்கும் அதிகமானவர்கள் இதனைப் பார்வையிடுவது குறிப்பிடத்தக்கது.

ஹீலியம் நிரப்பப்பட்ட சுமார் நூறு பலூன்களை நாற்காலியொன்றில் இணைத்து ஒன்றாகக்கட்டி, அதன் வழியாக ஆகாயத்தில் உயரப் பறந்து சாகசம் புரிந்த டானியல் போரியா என்ற கல்கேரிவாசி பொலிசாரின் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். துப்புரவுப் பொருட்களின் நிறுவனமொன்றுக்கு விளம்பரம் செய்யும் வகையில் இவர் இவ்வாறு அபாய-மான சாகசத்தில் ஈடுபட்டாராம்.

வடஅமெரிக்காவிலேயே மிகப்பெரிய நகர்ப்புற தேசிய பூங்காவாக அமையவுள்ள ஸ்காபரோ கிழக்கு றூஜ் தேசிய பூங்காவுக்கு, மேலதிகமாக 21 சதுரகிலோ மீட்டர் பரப்பளவு நிலத்தை மத்திய அரசு ஒதுக்கியுள்ளது. பிக்கரிங் மற்றும் அக்ஸ்பிரிட்ஜ் ஆகிய பிரதேசங்களையும் உள்ளடக்கியதாக சுமார் 79 சதுரகிலோ மீட்டர் பரப்பளவில் இந்தப் பூங்கா அமையும என்று பிரதமர் ஹாப்பர் அறிவித்துள்ளார்.

வாகனத்தை ஓட்டியவாறு காலை உணவாக 'ஸீரியல்' சாப்பிட்டுக்கொண்டிருந்த இருவர் போக்குவரத்துப் பொலிசாரிடம் சிக்கியதையடுத்து இருவருக்கும் தலா 490 டாலர் அபராதம் விதிக்கப்பட்டது. 'கவனக்குறைவான வாகன ஓட்டம்' என்ற குற்றத்தின் கீழ் தண்டம் விதிக்கப்பட்டதற்கும் அப்பால், இருவரது சாரதி லைசன்சிலிருந்தும் தலா ஆறு புள்ளிகளும் பறிக்கப்பட்டன.

கனடிய உளவுத்துறையின் தகவல் காவிகளை (CSIS Carriers) திட்டமிட்டு இலக்கு வைத்து சைபர் தாக்குதல் நடத்தி அதன் செயற்பாடுகளை முடக்குவது அடிக்கடி நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கனடாவின் சர்ச்சைக்குரிய 'மசோதா - 51' தொடர்பிலான தங்களின் எதிர்ப்பைத் தெரிவிக்கும் அணியினர் இந்தத் தாக்குதலை நடத்துவதாக பாதுகாப்புத் துறைக்குத் தெரியவந்துள்ளது.

உடல் உறுப்புகளைத் தானம் செய்யும் கனடியர்களில் ஒன்ராறியோவாழ் மக்களே கூடுதலாகவிருப்பதாக ட்ரில்லியம் அமைப்பு அறிவித்துள்ளது. கடந்த ஆண்டில் மரணமான 271 கொடையாளிகளால் 960 பேர் நன்மையடைந்ததாகவும், உயிருடன் வாழும் 278 கொடையாளிகளால் 231 பேருக்குச் சிறுநீரகங்களும் 65 பேருக்கு ஈரல்களும் கிடைத்ததாக புள்ளிவிபரம் மேலும் தெரிவிக்கின்றது.

ஒன்ராறியோ மாகாண அரசாங்கம் அறிமுகப்படுத்த விரும்பும் ஓய்வூதியத் திட்டத்தை ஹாப்பரின் மத்திய அரசாங்கம் நிராகரித்துவிட்டது. இதற்கு எந்தவகையிலும் உதவி வழங்க முடியாதென மத்திய அரசு தெரிவித்துள்ளதையிட்டு அதிருப்தியடைந்துள்ள ஒன்ராறியோ முதல்வர் கத்லீன் வின், இவ்வருட பொதுத்தேர்தலின்போது ஹாப்பரிடம் இது தொடர்பாக மக்கள் கேள்வி எழுப்புவரென்று தெரிவித்துள்ளார்.

## இந்திய விஞ்ஞானி அப்துல் கலாம் காலமானார்

இந்தியாவின் 'மக்கள் ஜனாதிபதி' என்று போற்றப்பட்டுவந்த தலைசிறந்த விஞ்ஞானி அப்துல் கலாம் கடந்த மாதம் 27ம் திகதி காலமானார். பிரமச்சாரியாக வாழ்ந்து உலக மேம்பாட்டுக்காக உழைத்துவந்த அவருக்கு இறக்கும்போது வயது 83. இந்தியாவின் வடகிழக்குப் பிரதேசமான மேகாலயாவிலுள்ள ஷில்லாங் என்ற நகரில் பொதுநிகழ்வொன்றில் உரையாற்றிக் - கொண்டிருக்கையில் திடீரென மயங்கிச் சரிந்து வீழ்ந்த அப்புதுல் கலாம் அவர்கள் அடுத்த சில நிமிடங்களில் காலமானதாக அறிவிக்கப்பட்டது. குடியரசுத் தலைவர், விஞ்ஞானி, எழுத்தாளர், விரிவுரையாளர், ஏவுகணை மனிதர் என்று பல மகுடங்களுக்குச் சொந்தமான இவர் தம்மை ஓர் ஆசிரியர் என அழைப்பதையே கூடுதலாக விரும்பி வந்தார்.

## இலங்கையில் இந்த மாதம் 17ல் நாடாளுமன்றத் தேர்தல்

இலங்கையில் நாடாளுமன்றத் தேர்தல் இந்த மாதம் 17ம் திகதி நடைபெறவுள்ளது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைத் தலைவராகக் கொண்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைமை வேட்பாளராக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராகபக்ஷ போட்டியிடுகின்றார். மைத்திரி சிறிசேனவின் பூரண ஆதரவுடன் நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் போட்டியிடுகின்றது. தமிழர் தாயகத்தில் தமிழர் தேசியக் கூட்டமைப்புக்கும் தமிழ் மக்கள் தேசிய முன்னணிக்குமிடையில் முன்னைய தேர்தல்களைவிட இம்முறை கடும் போட்டி நிலவுவதாக ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## பிள்ளைகள் உதவிநிதி அதிகரிக்கப்பட்டுள்ளது

கனடிய மத்தய அரசு பிள்ளைகளுக்கான நிதியுதவியை அதிகரித்து, அதற்கான கொடுப்பனவையும் கடந்த மாதத்திலிருந்து ஆரம்பித்துள்ளது. .இந்த வருடம் ஜனவரி மாதத்திலிருந்து செல்லுபடியாகும் வகையில் இந்த நிதியுதவி வழங்கப்பட்டது. ஆறு வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு 160 டாலரும், 7 வயதுக்கும் 14 வயதுக்குமிடை-ப்பட்ட பிள்ளைகளுக்கு 60 டாலர்களும் மாதமொன்றுக்கு வழங்கப்படுகின்றது. பொதுத்தேர்தலை இலக்கு வைத்து ஸ்டீபன் ஹாப்பர் இதனை ஒரு போனஸாக வழங்குவதாக எதிர்க்கட்சிகள் விமர்சனம் செய்து வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Immigration Application Refused?

## What CIC states in the refusal is not the whole Story!

**by STEVEN MEURRENS**

A person whose visa, permit or immigration application has been refused needs to understand two things.

First, when Citizenship and Immigration Canada (CIC) refuses an application, it does not necessarily provide the full reasons for the refusal to the applicant.

Second, it is possible for an applicant to apply for and receive the full, internal reasons for CIC's refusal. Applicants should do so before either resubmitting an application to CIC, or throwing in the towel.

### Not the whole story

CIC's refusal letters are generally extremely vague. They typically consist of generic letters stating that applicants did not meet the requirements of Canadian immigration legislation. As well, the refusal letters typically contain a list of all possible reasons why CIC may refuse an application, with a checkmark or an X next to the reason(s) applicable to the applicant. Possible reasons include "lack of funds," "travel history," "purpose of visit," etc.

What most applicants whose applications have been refused don't realize is that behind these decisions are additional, often very detailed reasons that aren't provided in the refusal letter. These internal reasons can range from a few short sentences, to sometimes even more than a page of reasoning that CIC does not share with applicants.

Although this may seem unfair to applicants, the Federal Court of Canada has consistently ruled that there is no requirement for CIC to provide the detailed reasons for refusal in its refusal letters. There is also no requirement that CIC inform applicants that if they want to obtain detailed reasons for the refusal that it is possible to do so.

### Getting the reasons from CIC

There are several ways for an applicant whose visa has been refused to obtain CIC's detailed, refusal reasons. If the applicant is outside Canada, then he or she can file an Access to Informationrequest. If the applicant is inside Canada, then he or she can file a Privacy Actrequest. Both of these requests can be submitted online. CIC is legally obligated to provide the full reasons within 30 days of receiving the request, which it typically does by e-mail.

Another way is to commence an Application for Leave to Commence Judicial Review. However, because doing this actually launches a Federal Court action, it is typically only done when an applicant is appealing CIC's refusal, and where judicial deadlines do not permit waiting 30 days while you wait for the detailed reasons.

### Next steps after refusal

It is important that anyone whose application has been refused receive the detailed reasons before they consider next steps.

For example, our office recently consulted with an individual whose temporary resident visa was refused. The refusal letter stated that the reason for the refusal was his insufficient finances. She was flabbergasted, as she had included in her visa application a bank statement showing more than sufficient funds for her trip in Canada. We advised her to wait until we had applied for and received the internal CIC reasons before she took any further steps.

CIC's detailed reasons contained the detailed reason, which had an obvious solution. The internal reasons stated that CIC did not consider the bank statement to be reliable because the bank statements did not have the applicant's name. It was easy for the applicant to correct this when she reapplied.

Given how easy it can be for applicants to remedy mistakes in their visa applications once they see the detailed reasons for refusal, the obvious question that has to be asked is why does CIC not provide more detailed reasons in its refusal letters?

I am not the first person to ask this. Indeed, during every legislative session, Don Davies, member of Parliament for Vancouver Kingsway, introduces a private member's bill to amend Canadian immigration legislation to require visa officers to provide the detailed reasons for refusal. Davies' proposal has never made it past first reading in the House of Commons, which is a shame. Refused applicants should know why their applications were refused without them having to apply and wait for detailed reasons.

**Steven Meurrens is an immigration lawyer with Larlee Rosenberg in Vancouver.●**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டாக்டர் எம். கே. முருகானந்தன்

# மணிக்கட்டில் வலி ஏன்? பயிற்சிகள் எவை?

"“கத்தியைப் பிடிச்சு மரக்கறிதன்னும் வெட்ட முடியுதே. இந்தக் கையாலை பெருந்தொல்லை" என்றவர் ஒரு பெண்மணி என்பதைப் புரிந்து கொண்டிருப்பீர்கள்.

கை என்று பொதுவாகச் சொன்னாலும் மணிக்கட்டைத்தான் குறிப்பிட்டார். அதுவும் ஒரு பக்கத்தில் மட்டுமே. இன்னும் தெளிவாகச் சொன்னால் மணிக்கட்டின் வெளிப்புறமாக கட்டை விரலும் மணிக்கட்டும் சந்திக்கும் இடத்தில்தான் வலி.


## நோயின் குணங்கள்

மணிக்கட்டின் வெளிப்புறத்தில் ஏற்படும் இந்த நோய்க்கு வாயில் நுழைய மறுக்கும் ஒரு பெயர் மருத்துவத்தில் உண்டு. 'டி குயர்வெயினஸ் ரீனோ சைனொவைடிஸ்' (De Quervain's tenosynovitis) என்பதாகும். இது மூட்டுகளில் ஏற்படும் மூட்டு நோயல்ல. அதாவது ஆர்திரைடிஸ் (Arthritis) நோயல்ல.

மணிக்கட்டின் ஓரமாகச் ஒரு திசுப்படலத்தின் ஊடாகச் சென்று பெருவிரலை அடையும் தசைநாணில் (tendon) ஏற்படும் நோயாகும். பெருவிரலை ஆட்ட வளைக்க உதவுவது அந்தச் தசைநாண்தான். தசைநாணை சவ்வு என்றும் சொல்லலாம்.

இந் நோய் உள்ளவர்களுக்கு மணிக்கட்டை வளைக்கும் போதும், ஏதாவது பொருளை பற்றிப் பிடிக்கும்போதும், வலி அதிகமாகும். இந் நோய் ஏன் ஏற்படுகிறது என்பதற்கான காரணம் தெளிவாக தெரியவில்லை. ஆயினும் அந்தத் தசைநாண்களை அளவிற்கு அதிகமாகப் பயன்படுத்துவதாக இருக்கலாம்.

வலிதான் இந்நோயின் முதலாவதும் முக்கியமானதுமான அறிகுறியாகும். பெருவிரலின் அடிப்பகுதி முதல் மணிக்கட்டுவரை இந்த வலி நீடிக்கும். விரலை ஆட்டி வேலை செய்யும்போது வலி அதிகரிக்கும். அந்த இடத்தில் சற்று வீக்கமும் ஏற்படலாம். நாளாந்த வேலைகளின் போது பெருவிரலையும் மணிக்கட்டையும் பயன்படுத்தும் செயற்பாடுகளில் சிரமம் ஏற்படும். விரலை மடக்கும் போது திடீரென இறுகிப் பின்னர் விடுவதுபோன்ற உணர்வு சிலரில் ஏற்படுவதுண்டு. வலியைத் தவிர பெருவிரல் மற்றும் சுட்டு விரலிகள் மரப்பது போன்ற உணர்வும் சிலரில் ஏற்படுவதுண்டு. ஆரம்ப நிலையில் அக்கறைப்படுத்தாமல் விட்டால் வலியானது முன்புறமாகப் பெருவிரலுக்கும், பின்புறமாக முன்னங்கையிற்கும் பரவி வேதனை அதிகமாகும்.




## எவ்வாறு ஏற்படுகிறது?

பெருவிரலை இயக்கும் இரு தசைநாண்கள் மணிக்கட்டுப் பகுதியில் ஒரு திசுப்படலத்தின் (fascia) ஊடாகவே செல்கின்றன. அத் தசைநாண்களுக்கு வேலை அதிகரிக்கும்போது அவற்றில் அழற்சி ஏற்பட்டுத் தடிப்பு அடையும். இதுவே நோய்க்கான முக்கிய காரணமாக இருக்கிறது. இருந்தபோதும் ரூமட்ரொயிட் ஆர்திரைடிஸ் போன்ற மூட்டு நோய்களின் போதும் ஏற்படலாம். மணிக்கட்டிற்கு அல்லது அத்தசைநார்களில் அடிபடுவதால் உட்காயங்கள் ஏற்பட்டு, அதன் விளைவாகவும் இந்நோய் ஏற்பட வாய்ப்பு உண்டு.

எவருக்கும் இந்நோய் ஏற்படலாம் என்றபோதும் 30 முதல் 50 வயதானவர்களிடையே அதிகம் காணப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அத்தசை நாண்களுக்கு அதிக வேலை கொடுக்கும் பணிகளில் ஈடுபடுபவர்களுக்கு வருவதற்கான சாத்தியம் அதிகம். எனவே, தோட்டத்தில் எதையாவது கிண்டுவது வெட்டுவது போன்ற வேலைகள், கொல்ப் டெனிஸ் போன்ற விளையாட்டுக்கள், குழந்தையைத் தூக்குவது போன்றவற்றைத் தொடர்ந்து செய்யும்போது இப் பிரச்சனை தோன்றலாம்.

பெண்களில் இது தோன்றுவது அதிகம். கர்ப்பமாக இருக்கும்போதும் ஏற்படுவதுண்டு. பொதுவாக நடுத்தர வயதினரிடையே எற்பட்ட போதும் பேரப் பிள்ளைகளைப் பராமரிக்கும் வேலை தலையில் வீழ்வதால் சற்று வயதான பெண்களிலும் இங்கு காணமுடிகிறது.

## வலி வந்தால் என்ன செய்யலாம்?

உங்களுக்கு எந்தெந்த வேலைகள் செய்தால் வலி எடுக்கிறதோ அவற்றைச் செய்வதைத் தவிருங்கள்.

வலி உள்ள இடத்தில் ஐஸ் வைப்பது வலியையும் வீக்கத்தையும் தணிக்க உதவும்.

வலிநிவாரணி மாத்திரைகளை உட்கொள்ளலாம்.

மணிக்கட்டையும் பெருவிரலையும் ஆடாமல் வைத்து ஓய்வு கொடுப்பதற்கு பன்டேஸ் பண்ணுவது உதவும்.

இதற்கான splint, brace போன்றவை மருந்தகங்களில் கிடைக்கும். இவற்றை பகல் முழுவதும் அணிந்திருக்கலாம். வலியைத் தணிப்பதற்கு சில பயிற்சிகள் உதவும். இவை பற்றி கட்டுரையின் இறுதியில் கூறுகிறேன். வலியுள்ள இடத்தில் மருத்துவர்கள் ஸ்டிரோயிட் (Steroid) ஊசி மருந்து போடுவதுண்டு. இதுவும் நல்ல பலனைக் கொடுக்கும். மிக அரிதாக வலி மிகக் கடுமையாக இருந்தால் சத்திரசிகிச்சை செய்யப்படுவதுண்டு. தசைநாணை அழுத்திப் பிடிக்கும் திசுப்படலத்தை வெட்டி இளக்குவதன் மூலம் தசைநாண்களை இலகுவாக அசையவிடுவார்கள்.

பல்வேறு விதமான பயிற்சிகள் உள்ளன

## டெனிஸ் பந்தை அழுத்தல் பயிற்சி

வலியுள்ள கையில் ஒரு டெனிஸ் பந்தை பற்றிக் கொள்ளுங்கள். மெதுவாக பந்தின் மீது அழுத்துங்கள். வலி ஏற்படவில்லை எனில் அழுத்தத்தை சற்று கூடுதலாகப் பிரயோகியுங்கள். சுமார் 5 செகண்டுகளுக்கு அழுத்தி வைத்திருந்துவிட்டு பின்னர் பிடியைத் தளர்த்துங்கள். இவ்வாறு 5 முதல் 10 தடவைகள் செய்யுங்கள். தினமும் 4-5 தடவைகள் இப் பயிற்சியைத் திரும்பச் செய்யுங்கள். இப்பயிற்சியைச் செய்வதற்கு முன்னரும் பின்னரும் அந்த இடத்திற்கு

(28ஆம் பக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அ. முத்துலிங்கம்

# மரங்கள்

பழைய நண்பர் ஒருவர் மின்னஞ்சல் அனுப்பியிருந்தார். ஒரு திருமணவிழாவில் விருந்தினர்களுக்கு மரக்கன்றுகள் பரிசளித்து மரியாதை செய்தார்களாம். சுற்றுச்சூழல் பாதுகாப்பில் எத்தனை அக்கறை காட்டுகிறார்கள் சில இளம் தலைமுறையினர்.

ஒரு கதை சொல்வார்கள். 200 வருடங்களுக்கு முன்னார் தஞ்சை மன்னர் ஒருவர் தன் பரிவாரங்களுடன் ராச்சியத்தை சுற்றிப் பார்த்தார். பல கிராமங்களுக்கு இப்படி பிரயாணம் செய்தவர் ஒருமுறை பொட்டல் காடு ஒன்றில் தங்கவேண்டி நேர்ந்தது.

அங்கிருந்த ஏழை சனங்கள் மரியாதை செய்யும் முகமாக அரசனுக்கு தாம்பூலம் கொடுத்தார்கள். அரசனும் வாங்கி யோசிக்காமல் சாப்பிட்டுவிட்டான். பிறகு பார்த்தால் அன்று ஏகாதசி. அரசன் விரதம் இருக்கும் நாள். மறந்துபோய் சாப்பிட்டுவிட்டதால் விரதத்துக்கு பங்கம் ஏற்பட்டுவிட்டது.

என்ன பரிகாரம் செய்யலாம் என்று மந்திரியிடம் ஆலோசனை கேட்டான். அவன் சொன்னான், 'இந்த இடத்திலே ஆயிரம் மரங்கள் நட்டு இருபது கிணறுகளும் தோண்டி ஆட்களை குடியிருத்தி அவர்கள் சுபிட்சமாக வாழவேண்டும்' என்றான். அப்படியே அரசனும் செய்தான். இன்றும் அந்தக் கிராமம் செழித்து வளர்ந்து இருக்கிறதென்று சொல்வார்கள். ஒரு மன்னன் செய்த தவறு பொட்டல் காட்டை நல்ல பூமியாக மாற்றிவிட்டது.

நான் படித்த காலத்தில் எங்கள் ஆசிரியர் சொல்வார். கிடங்குக்குள் இருக்கும் ஒருவன் மேலும் கிண்டக்கூடாது என்று. நாங்கள் இப்ப அதைத்தான் செய்துகொண்டிருக்கிறோம் போல படுகிறது. அமெரிக்க சுதந்திர பிரகடன ஆரம்ப வரியை எல்லோரும் புகழ்வார்கள். All men are created equal. பெண்ணுக்கே அதில் இடம் இல்லை. Men என்றுதான் அது சொல்லும். ஆனால் திருவள்ளுவர் ஒரு படி மேலேபோய் 'பிறப்பொக்கும் எல்லா உயிரும்' என்றார்.

பிறக்கும்போது எல்லா உயிரும் சமம். ஆண் பெண் மாத்திரமல்ல. மனிதன் விலங்குகள் பறவைகள் பூச்சி புழு அனைத்தும் சமம்தான். பரிணாமச் சங்கிலியில் மனிதன்தான் கடைசி. மனிதன் தோன்றுவதற்கு 300 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னரே கரப்பான் பூச்சி தோன்றிவிட்டது.

ஆனால் மனிதன் நடக்கும்போது சர்வசாதாரணமாக ஒரு கரப்பான் பூச்சியை காலால் தேய்த்துவிட்டு போவான். இந்தப் பூமியை, கடைசியாகத் தோன்றிய மனிதன் ஆள்கிறான். சகல உயிரினங்களும் இயற்கையோடு ஒத்து வாழ மனிதன் மட்டும் இயற்கையோடு வாழ்வதை நிறுத்திவிட்டான். பூமியின் சுற்றுச்சூழல் அழிவுக்கு அதுதான் காரணம்.

இன்று பூமியில் சுற்றுச்சூழல் அழிவு உச்சத்தில் இருக்கிறது. புதிய பாலைவனங்கள் தோன்றுகின்றன. ஆறுகள் வற்றிவிட்டன. காற்றிலே நச்சுவாயு கலந்துவிட்டது. தன்சேனியாவில் ஓர் இடம் இருக்கிறது லேடோலி என்று பெயர். 3.6 மில்லியன் வருடங்களுக்கு முன்னர் மனிதர் நடந்துபோன காலடித் தடங்கள் பதிந்துபோய் இன்றும் பாதுகாக்கப்படுகின்றன.

1978ம் ஆண்டில் மேரி லீக்கி என்னும் புதைபொருள் ஆராய்ச்சியாளர் இதை கண்டு பிடித்தார். மனிதன் நிமிர்ந்து நடந்ததற்கான முதல் அடையாளம். ஒரு பெரிய காலடி ஒரு சின்னக் காலடி. சின்னக்காலடி பெண்ணுடையதாக இருக்கலாம். அதில் ஒருகால் கொஞ்சம் பள்ளமாக இருப்பதால் அவள் ஒரு குழந்தையை காவியிருக்கலாம். கால் ஒருபக்கம் சாய்ந்து இருப்பதால் அவள் திரும்பி பின்னுக்கு பார்த்திருக்கலாம். ஒரு விலங்கு அவர்களை துரத்தியிருக்கக்கூடும். அல்லது இன்னொரு பகை இனக்குழுவாகக்கூட இருக்கலாம்.

அந்தச் சமவெளியில் ஆதி மனிதர்கள் ஆபத்து வருவதை ஆகக்கூடியது இரண்டு மைல்தூரம் பார்க்கலாம். அதன் பின்னர் மனிதன் தூரக் கண்ணாடியை கண்டு பிடித்தான். பத்துமைல்தூரம் பார்த்தான்.

இன்று என்ன நடக்கிறது. மனிதன் விஞ்ஞானத்தின் உதவியால் சாட்டிலைட் படம் மூலம் முழுப் பூமியையும் பார்க்கிறான். ஆதிகால மனிதன் போல 2 மைல் தூரம் அல்ல. ஆர்க்டிக்கில் பனி உருகுவதையும் அமேஸன் காடு அழிவதையும் சாட்டிலைட் வழியால் காணமுடிகிறது. அழிவை கண்காணிப்பது மட்டுமல்லாமல் அவனால் தடுக்கவும் முடியும். அதில் ஒன்றுதான் மரங்கள் நடுவது.

திருமணங்களிலும், பிறந்தநாள் விழாக்களிலும், கொண்டாட்டங்களிலும் மரங்கள் பரிசு கொடுப்பது நல்ல விசயம். மனிதன் பிறந்ததிலிருந்து இயற்கையை அழித்து வாழ்கிறான். மரம் நடுவது ஒரு சின்ன பிராயச்சித்தம்.●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘சிந்தனைப் பூக்கள்’ எஸ். பத்மநாதன்



# மனமே! நலமா?

50

‘பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்க’ என்று திருமணத் தம்பதிகளை வாழ்த்தும்போது அதன் விளக்கம் பதினாறு பிள்ளைச் செல்வங்கள் என்று கருதியவர்களும் இருந்துள்ளனர். அபிராமிப் பட்டரின் பாடலில் ஒருவருக்கு வேண்டிய பதினாறு செல்வங்கள் அழகாக அடுக்கப்பட்டுள்ளன. ‘கலையாத கல்வியும்’ எனத் தொடங்கும் பாடலில் ‘சலியாத மனமும் அன்பகலாத மனைவியும்’ என்று இடையே சேர்த்துக் கொள்வது மிகவும் சிந்திக்கத் துாண்டுவது.

எடுத்ததற்கெல்லாம் சலிப்பு கொள்ளும் எல்லோருக்கும் புத்துாக்கம் தரும் வரி இது. இன்னோரிடத்தில் ‘தனம் தரும் கல்வி தரும் தளர்வு அறியாத மனம் தரும்’ என்று கூறுவது எத்தனை நூல்களை வாசித்தாலும் தெளிவு பெறாத கருத்து. சலிப்புறாத, தளர்வில்லாத மனம் என்பது எவ்வளவு அர்த்தம் கொண்டவை. இரண்டு சொற்களும் தெளிந்த மனம் பற்றியே கூறுவன.

‘பூமியிலிருந்து எடுக்கப்பட்டதைவிட, மனிதர்கள் மனதிலிருந்து அதிகம் எடுக்கப்பட்டுள்ளது’ என்ற அரிய கருத்தினை கூறியவர் நெப்போலியன் ஆவார். அதாவது எங்கள் மனமே அளவற்ற செல்வத்தையும், முடிவில்லாத ஏழ்மையையும் உருவாக்குகின்றது என்பதே இதன் பொருள். அதாவது மனத்தைச் சரியான முறையில் பழக்கினால் வேண்டியது விரைவில் கிட்டும். அதிர்ஷ்டத்துக்குக் காத்திருந்தால் அது வர பல காலம் எடுக்கும். அதாவது எமக்குள் இருக்கும் புதையலைத் தோண்டி எடுப்பது மனம்தான்.

‘வெற்றி என்பது இறுதியானதல்ல: தோல்வி என்பது மரணமுமல்ல: தொடர்ந்து முன்னேற மனதில் இருக்கும் தைரியமே முக்கியமானது’. இந்தக் கருத்தினை வெளியிட்டவர் வின்சன்ற் சேர்ச்சில். இந்தச் சிந்தனையை இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னரேயே வள்ளுவர் ‘எண்ணத்தை, செய்யும் காரியத்தில் ஒருமுகப்படுத்தினால் நாம் திண்ணியராகலாம்’ என்கிறார். இவர் கூறிய திண்ணியர் என்ற சொல் ஆழமான பொருள் பொதிந்த ஒன்று.

தோமஸ் அல்வா எடிசன் மின்சாரத்தைக் கண்டுபிடிக்க பத்தாயிரம் முறை முயன்றும் வெற்றி கிட்டவில்லை. ஆனால் அவர் மனம் தோல்வியை ஏற்கவில்லை. அவர் மனம் அவரிடம் சொன்னது இதுதான்: ‘பத்தாயிரம் வழிகளில், எப்படிச் செய்தால் மின்சார விளக்கு எரியாது என்பதனை நீ கண்டுபிடித்திருக்கிறாய்: அதனால் இவற்றை விடுத்து இன்னும் ஒரு புது முயற்சியை செய்’. அவர் செய்தார், அதன் விளைவு ? இன்று எல்லோருக்கும் மின்சாரம் கிடைத்துள்ளது.

பிரபஞ்சத்துடன் எமது மனமும் பின்னப்பட்டுள்ளது என்பதனை அறிஞர்கள் ஒப்புக் கொள்கின்றனர். கணினியை சரியாக இயக்க தெரிந்தவர் இணையத்திலிருந்து பல பயன்களை பெறுவதுபோல, தன் மனத்தை சரியாக இயக்க தெரிந்தவர், அண்டவெளியில் இணைக்கப்பட்டுள்ள எல்லா மனங்களினதும் எண்ண அலைகளை ஆராய்ந்து, தனக்கு வேண்டியதை பெற்றுக் கொள்கிறார்.

‘எண்ணங்கள் தோன்றும் விளைநிலமே மனம்’ இதில் ஒவ்வொருவருக்கும், அன்பு, கருணை, தயை, இரக்கம் எல்லாமே அடங்கும்.

மீண்டும் சந்திப்போம்.●

## பற்றிக் பிறவுணுக்கு ஒரு தொகுதி தயார்!

ஒன்ராறியோவின் புறகிறசிவ் கட்சியின் தலைவராகக் கடந்த மே மாதம் தெரிவான பற்றிக் பிறவுணை ஒன்ராறியோ மாகாண சபைக்கு அனுப்ப ஏதுவாக சிம்கோ வடக்குத் தொகுதியின் அக்கட்சியைச் சேர்ந்த பிரதிநிதி கார்பீல்ட் டன்லப் இந்த மாதம் முதலாம் திகதி தமது பதவியை ராஜிநாமாச் செய்யப் போவதாகக் கடந்த மாதம் அறிவித்திருந்தார். ஆனாலும் அக்டோபர் 19ம் திகதி கனடிய பொதுத்தேர்தல் நடைபெறவிருப்பதால் அதற்கு முன்னர் இத்தொகுதியில் இடைத்தேர்தல் நடத்த முடியாதென ஒன்ராறியோ முதல்வர் அறிவித்துள்ளார்

## கனடிய முத்திரை விலை ஜனவரியில் அதிகரிக்கிறது

கனடாவின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முத்திரைகளின் கட்டணம் அடுத்த வருடம் ஜனவரி மாதம் 11ம் திகதி மீண்டும் அதிகரிக்கவுள்ளது. தற்போது 85 சதமாக-வுள்ள உள்நாட்டு முத்திரையின் விலை ஐந்து சதத்தால் உயர்ந்து 90 சதமாகின்றது. இது, பத்து முத்திரைகளுள்ள அட்டை அல்லது நூறு முத்திரைகளுள்ள சுருளின் விலையாகவிருக்கும் (எச். எஸ். ரி வரி வேறு). ஆனால், தனியான ஓரிரு முத்திரை-களை வாங்குவதாயின் ஒன்றின் விலை ஒரு டாலராக தொடர்ந்து இருக்கும் (எச். எஸ். ரி வரி வேறு). அமெரிக்காவுக்கான சாதாரண தபாற் கட்டணம் 1 டாலர் 20 சதத்திலிருந்து 1 டாலர் 25 சதமாகவும், சர்வதேச தபாற் கட்டணம் 2 டாலர் 50 சதத்திலிருந்து 2 டாலர் 60 சதமாகவும் அதிகரிக்கவுள்ளது. நவீன தொடர்பாடல் வசதிகள் காரணமாக தபால் வசதிகளைப் பயன்படுத்துவோர் தொகை வருடமொன்றுக்கு 5 பில்லியன்களிலிருந்து 3.6 பில்லியன்களாகக் குறைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. கடந்த வருடம் மார்ச் மாதத்துக்கு முன்னர் உள்ளூர் தபாற் கட்டணம் 63 சதமாகவே இருந்தது.

## கனடா மீண்டும் மிகச்சிறந்த நாடு

உலகில் மிகப் ‘பாராட்டுதற்குரிய புகழுடன் திகழும் நாடு’ என்ற பெருமையைக் கனடா மீண்டும் தனதாக்கிக் கொண்டுள்ளது. அரசியற் செயற்பாடுகள், சுற்றுச் சூழல் நடவடிக்கைகள், பொருளாதார மேம்பாடு ஆகியவைகளை மையப்படுத்தி ‘றெப்புட்டேஷன் இன்ஸ்டிரியூட்’ என்னும் சர்வதேச அமைப்பு மேற்கொண்ட தரவுகளின் அடிப்படையில் இத்தெரிவு இடம்பெற்றது. 2011, 2012, 2013ம் ஆண்டுகளில் இத்தெரிவில் முதலிடத்தில் வந்த கனடா கடந்த வருடம் இரண்டாமிடத்துக்குச் சென்றதாயினும், மீண்டும் இவ்வருடம் முதலிடத்தைக் கைப்பற்றியுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனகேஸ்வரி நடராஜா

# சிகை அலங்காரம்
# Hair Style

இங்கு ஆசிரியையாகக் கடமையாற்றத் தொடங்கியபொழுது முதலில் எனது கவனத்தை ஈர்த்தது இங்குள்ள மாணவர்களின் சிகை அலங்காரமே. எந்த இரு பெண் பிள்ளைகளினதோ, அன்றேல் ஆண் பிள்ளைகளினதோ சிகை அலங்காரம் ஒரே மாதிரி இருக்கவில்லை. இவ்வளவு வகை வகையாக முடியை அலங்கரிக்க முடியுமா என என்னை வியப்பில் ஆழ்த்தியது. எத்தனை எத்தனை விதமாகத் தலைமுடியைக் கத்தரித்திருந்தனர், எவ்வளவு நிறங்களில் சாயம் பூசியிருந்தனர். இந்த அலங்காரங்களுக்குப் பின்னால் எவ்வளவு மணித்தியால மனித உழைப்பும், பணச் செலவும் அடங்கியிருக்கின்றது என வியக்காமல் இருக்க முடியவில்லை.

அதேநேரத்தில் எமது தாய்நாட்டு வகுப்பு அறைகளையும் ஒப்பிடாமல் இருக்க முடியவில்லை. அங்கு வகுப்பு அறைக்குள் பிரவேசித்தவுடனேயே ஒரு தெய்வீக உணர்வு ஏற்படுவதுண்டு. வெள்ளை நிறச் சீருடையில் மாணவிகள் தாராளமாக எண்ணெய் தடவி, ஒரு தலைமுடிகூட விலகாமல் தலையை வாரி இரண்டு பின்னலோ, சிலசமயங்களில் ஒரு பின்னலோ பின்னி, அதுகூட நுனிவரை சிலும்பாமல் இருக்க ரிப்பன் கட்டி தேவதைகள் போல் காட்சியளிப்பார்கள். மாணவிகள் என்றால் இப்படித்தான் தோற்றமளிக்க வேண்டும் என்ற ஒரு அளவுகோல் அங்கு இருந்தது. இந்த நாட்டில் ஏன் இந்தக் கோலம் என்றுதான் நான் முன்பெல்லாம் நினைப்பதுண்டு. ஆனால் காலப் போக்கில் இது பழக்கப்பட்டு போய்விட்டது. இன்று எம்மவர்கள் கூட தலைமுடியை விதம் விதமாக கத்தரிப்பதையும், சாயம் பூசுவதையும், அலங்கரிப்பதையும் சர்வசாதாரணமாக (norm) ஏற்றுக் கொள்ள வேண்டியுள்ளது.

மேற்கு நாடுகளின் சந்தையில் சிகை அலங்காரம் ஒரு பெரும் தொழிலாக மாறியுள்ளது. பெரும் பெரும் அங்காடிகளில் சிகை அலங்காரக் கடைகள் தாராளமாகக் காணப்படுகின்றன. ஒரு கடைக்குப் பக்கத்திலேயே மற்றக் கடையும் காணப்படுகிறது. ஆனாலும் எல்லாக் கடைகளிலுமே சனம் நிரம்பி வழிகிறது. வயோதிபர் இல்லங்களில்கூட கட்டாயமாக ஒரு Hair Saloon இருக்கிறது. வயோதிபர்கள் வெளியே போகாமல் முடிவெட்டுதல், கழுவுதல், சாயம் போடுதல் முதலியனவற்றைச் செய்து கொள்ள முடிகிறது. இன்று எத்தனையோ மக்கள் தாங்களாகவே இவற்றை எல்லாம் செய்யும் திறன் உடையவர்களாக உள்ளனர். தலைமுடியை கழுவுவதற்கு வேண்டிய ஷம்பூக்கள், வாசனைத் திரவியங்கள், பல நிற சாயங்கள் யாவும் வகை வகையாகக் கிடைக்கின்றன. விற்பனையாகும் கடைகளின் தட்டுகளில் காணப்படும் இப்பொருட்களை நாம் முன்பு ஒரு பொழுதும் காணவில்லை, கேள்விப்படவுமில்லை. இவற்றைப் பார்க்கும்போது தாய்நாட்டில் நாம் வாழ்ந்த எளிமையான வாழ்க்கையை நினைக்காமல் இருக்க முடியவில்லை.

இங்கு தலைமுடியை வளராமல் கத்தரித்தபடி இருக்கிறோம். ஆனால் அங்கோ எவ்வாறெல்லாம் தலைமுடியை நீளமாக வளர்க்க முடியும் என்பதையே கருத்தில் கொண்டோம். சனிக்கிழமை காலையில் அம்மா ஒரு பெரிய பாத்திரத்தில் சீயாக்காயும், வெந்தயமும் சேர்த்து அவித்து வைத்திருப்பா. யாராவது ஒருவர் கிணற்றடியில் இதற்கெனப் பிரத்தியேகமாக உள்ள அம்மியில் இவற்றை பட்டுப்போல அரைத்து வைத்திருப்பார்கள். வசதிக்கேற்ப ஒவ்வொருத்தராக சீயக்காய் தேய்த்து முழுகுவோம். தலைமுடி வளர்வதற்கு சிதம்பரத்தம்பூ, முட்டை நல்லது என யாராவது கூறிவிட்டால் உடனே அதனையும் செய்து பார்ப்போம். சனிக்கிழமையென்றால் கிணற்றடியில் ஒரே அமர்க்களம்தான். அன்று வீட்டில் சமையல்கூட வித்தியாசமாக இருக்கும். இங்குபோல் அன்றாடம் தலையில் குளிக்கும் பழக்கம் அங்கு காணப்படவில்லை. இன்று அங்கும் பழக்கவழக்கங்கள் மாறிவிட்டன. நேர வசதிக்கேற்பவும், பணவசதிக்கேற்பவும் மேலைத்தேய நாகரிகத்தையே அங்கும் பின்பற்றத் தொடங்கியுள்ளனர்.

சிகை அலங்காரம் அதிக வருவாயைக் கொடுக்கும் ஒரு தொழிலாகவும், சுகமாக வேலை வாய்ப்பினை வழங்கும் ஒரு தொழிற்திறனாகவும் இருப்பதால் பாடசாலைகளில் இதனை ஒரு பாடமாகவே கற்பிக்கின்றனர். அத்துடன் ஒரு வேலைத்தலத்திலும் ஒரு சில மாதங்கள் பயிற்சி பெறுகின்றனர் (co-op placement). இங்கு எந்த ஒரு தொழிலைச் செய்வதற்கும் லைசென்ஸ் பெற வேண்டியுள்ளது. அதற்கு இத்தொழிலும் விதிவிலக்கல்ல. இங்கு நடிகர்கள், பாடகர்களின் சிகை அலங்காரத்தை தொலைக்காட்சியிலும், நேரிலும் பார்த்து அதனையே பலரும் பின்பற்றுகின்றனர். எம்மவர்கள்கூட அதற்கு விதிவிலக்கல்ல. கல்யாணப் பெண்ணின் தலைமுடியை அலங்கரிப்பதற்கென விசேட திறமையுள்ளவர்களை இன்று கட்டாயமாக எல்லோரும் பணம் கொடுத்து அமர்த்துகிறார்கள். அத்துடன் முடிவதில்லை. மணப்பெண்ணின் தாய் தொடக்கம் வீட்டில் உள்ள பலரும் பணம் கொடுத்தே தலைமுடியை அலங்கரிக்கிறார்கள். உச்சி முதல் உள்ளங்கால்வரை தமது தோற்றத்தில் கவனம் செலுத்தும் சமூகமாக நாமும் மாறிவிட்டோம். இது வரவேற்கப்பட வேண்டியதொன்று.

கான்சர் நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் அவர்களுக்கு அளிக்கப்படும் வைத்தியம் காரணமாக (Chemotherapy) தலைமுடியை இழக்கின்றனர். அவர்களுக்காகத் தமது தலைமுடியை தானம் செய்பவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள். பாடசாலைகளில்கூட இந்நோயின் காரணமாக மொட்டை விழுந்த பிள்ளைகளுக்கு ஆதரவு வழங்குவதற்காக சகமாணவர்கள் மொட்டை அடிப்பதுண்டு. இவை யாவும் இந்நாட்டிற்கே உரிய மனிதாபிமானத்தைக் காட்டுகிறது.

கூந்தல் பற்றிய அழகுணர்ச்சி இன்று நேற்றுத் தொடங்கியதில்லை. ஆதிகாலத்தில் எகிப்திய அழகிகள் தமது கூந்தலை எவ்வாறு வாசனைத் தைலங்கள் தடவி பராமரித்தார்கள் எனச் சரித்திரம் கூறுகிறது. பிரான்ஸ் தேச அரசன் 14ம் லூயி செயற்கைத் தலைமுடியை (wig) பாவித்தார். குறுந்தொகையில் நக்கீரரை 'குற்றம் குற்றமே' எனச் சொல்ல வைத்த 'கொங்குதேர் வாழ்க்கை' என்ற பாடலைத் தெரியாதவர் இருக்க மாட்டார்கள். அதில் வரும் வரிகள் 'நட்பின் மயிலியல் செறியெயிற் றரிவை கூந்தலின் நறியவும் உளவோ நீயறியும் பூவே' எனத்தான் கேட்கப்படுகிறது. இன்று இங்குகூட இந்தியாவிலிருந்து மல்லிகை இறக்குமதி செய்து தலைக்கு அலங்காரம் செய்யும் அளவுக்கு நாம் பொருளாதாரத்தில் முன்னேறி விட்டோம். எம்மவர் மத்தியில் சிகை அலங்காரம் மேன்மேலும் வளர்ச்சி அடைவது திண்ணம்.●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### எஸ். ஜெகதீசனின் பத்தாம் பக்கம்

# நனி சைவம்

ஆனி மாத இறுதி தொடங்கி புரட்டாதி மாத ஆரம்பம் வரை கனடாவில் விமானங்கள் நிரம்ப பறக்கும் காலம். 'தனிச் சைவம்' பற்றி பூரண அறிவுடன் பயணத்தை மேற்கொள்ளும் ஒருசிலருக்காவது நனி சைவம் (vegan) என்ற வார்த்தையை தற்பொழுதெல்லாம் அறிமுகம் செய்து வைப்பது பல விமான பயணங்கள்:பல நாடுகள்:பல உணவகங்கள்.

பெற்ற தாயும் பிறந்த பொன் நாடும் நற்றவ வானினும் நனி சிறந்தனவே என பாரதியார் கூறிச் சென்றதை அறிந்தது தவிர நனி என்ற சொல்லை வேறு எங்குமே எம்மில் பலர் பயன்படுத்தியது அபூர்வம். முந்தை இருந்து நட்போர் கொடுப்பின் நஞ்சும் உண்பர் நனி நாகரீகர் என நற்றிணையில் வருவதாக கூறுவர் பண்டிதர். நனி என்றால் மேன்மையானது சாலச்சிறந்தது தனித்துவமானது மிகுந்தது பெருக்கமானது என்று பொருள். சால உறு தவ நனி கூர் கழி ஆகிய ஆறு சொற்களும் அதே கருத்துடையவை.

நனிசைவ முறையே அனைத்து உணவுமுறைகளிலும் சாலச்சிறந்தது. குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை அனைவர்க்கும் ஏற்றது. மனித உடல் நலத்தை பாதிக்கும் பல்வேறு வியாதிகளை குணப்படுத்தவும் அத்தகைய வியாதிகள் வராதிருக்கவும் மாமருந்தது என்பார்கள் உணவியல் நிபுணர்கள். மாமிசம் உண்பவர்களைவிட அதிக வீரியமுள்ள வெள்ளை அணுக்கள் நனி சைவர்களது இரத்தத்தில் அதிகமாக உற்பத்தியாகின்றன என்பது அவர்களின் ஆய்ந்த முடிவு.

மதத்துக்காக – மருத்துவத்துக்காக – மகத்துவத்துக்காக – மிருக வதை எதிர்ப்புக்காக – வாழ்வு முறைக்காக – வாழ்விட வசதிக்காக என நனி சைவ உணவை உட்கொள்பவர்களுக்கான காரணங்கள் வேறுபடும். பழங்கள், உலர் பழங்கள், காய்கறிகள், தானியங்கள், கீரைகள், வித்துகள் என்பன உலகெங்கும் நனி சைவர்களை சுகதேகிகளாக வைக்கின்றது.

தேங்காய்ப் பால், சோயாப் பால், பாதாம் பால், வேர்கடலைப் பால் போன்றன மிருகங்களிலிருந்து பெறப்படும் பாலுக்கு நிகராகின்றன. அவற்றிலிருந்தே தயிரும் மோரும் தயாராக எள், நிலக்கடலை, பாதாம் பருப்பு, கஜு போன்றவற்றிலிருந்து வெண்ணெயும், நெய்யும், பாலாடைக்கட்டியும், பனீரும் பெறப்படுகின்றன. காளான் வகைகள் சோயா, டோஃபூ ஆகியவை இறைச்சிக்கும், முட்டைக்கும் பிரதியீடாகின்றன.

புற்று நோய், இருதய நோய், நீரழிவு, இரத்த அழுத்தம், உடல் பருமன், ஒவ்வாமை, சில சரும நோய்கள், மலச்சிக்கல், சிறு நீரகக் கல் போன்றவற்றின் தாக்கத்தை கணிசமான அளவு குறைக்க இந்த உணவு முறை சிபார்சு செய்யப்படுகின்றது.

சமண சமயம் (ஜைனம்) பிற உயிர்களுக்கு இம்சை கொடுக்காத கோட்பாட்டை தீவிரமாக பின்பற்றுவதால் பூரண நனிசைவ உணவை உட்கொள்பவர்கள் நிறைந்த ஒரே ஒரு மதமாகின்றது. சைவம் வைஷ்ணவம் பௌத்தம் சீக்கியம் போன்ற சமயங்களில் மாமிசம் அனுமதிக்கப்படவுமில்லை தடுக்கப்படவுமில்லை. ஏனையவை ஊனுண்ணிகள்.

மேற்குலக தமிழர் மத்தியில் இன்று தாவர பட்சணி என்பதும் மாமிச பட்சணி என்பதும் தெரியாமலே நீர்த்துப்போயிற்று. மரக்கறியா மாமிசமா என்றால் மயங்கும் புதிய தலைமுறை, சைவமா அசைவமா என்றால் கூட சமயத்தில் மூளைக்குள் அசை போடாது வேறென்ன செய்யும்? வெஜிடேரியன் (vegetarian) அல்லது நோன் வெஜிடேரியன் (non vegetarian) என்ற வார்த்தையே சர்வ சாதாரணமாய் அவர்களது வாயை நிறைக்கின்றது. தாவர உணவுடன் (vegetarian) பாலையும் தேனையும் சேர்த்துக் கொள்ளும் உண்முறை உலகெங்கும் உண்டு. அதற்குள்ளும் பால் தயிர் மோர் வெண்ணெய் பாலாடைக்கட்டி முட்டை மாமிசம் மீன் தேன் போனறவற்றை நிராகரிப்பவர்கள் நனி சைவ (vegan) உணவாளர்கள் எனப்படுகின்றார்கள். பழங்களை மட்டுமே சுவைப்பவர்கள் (fruitarian) சிலர். பால் முட்டை சேர்த்துக் கொள்ளலாம் தப்பில்லை என்பவர்கள் (eggetarian) சிலர். இலங்கையின் சிங்கள பகுதிகளிலும் வங்காளத்திலும் கருவாடு மீன் என்பனவும் சத்தியமாக மரக்கறி உணவேதான் என்பவர்களையும் (peskatarian) காணலாம். கோழி இறைச்சியில் அலாதி பிரியம் கொண்டு இதர புலால் வகைகளை தவிர்ப்பவர்கள் (pollotarian) வேறு சிலர். அட போங்கப்பா! வாரத்தில் ஆறு நாட்கள் மரக்கறி உணவும் ஞாயிறு கிழமை மட்டும் மாமிசமும் தின்கின்றோம் என்பவர்களும் (flexitarian) உளர். பூண்டு வெங்காயம் போன்றவற்றை உணவில் அதிகம் விரும்புபவர்கள் (lustarian) இச்சை மிக்கவர்கள்.

மரக்கறி உணவு முறை மிகவும் தொன்மையானது. பைதகரஸ் பிளோட்டோ போன்ற கிரேக்க தத்துவ ஞானிகள் பலர் நனி சைவர்களாக அக்காலத்தில் திகழ்ந்தனர் என்கின்றது வரலாறு. எனினும் பிரித்தானியரான டொனால்ட் வாட்ஸன் என்பவரே வீகன் என்ற ஆங்கிலப் பெயரை 1944ம் ஆண்டு உலகிற்கு அறிமுகப்படுத்தினார்.

ஆரோக்கியத்துக்கும் விலங்குகளுக்கும் சூழலுக்கும் தீங்கற்ற நனி சைவ உணவை அதிகளவில் உட்கொள்பவர்கள் உள்ள நாடு இஸ்ரேலாகும். பூச்சிகளின் எச்சிலான தேனும் பட்டும் நனிசைவர்களால் புறக்கணிக்கப்படுகின்றன.

புரதம் (protein) நார்சத்து (fiber) தாது உப்புக்கள் (mineral salts) மாச் சத்து (carbohydrate) உயிர்சத்துகள் (vitamins) அன்ரி அக்சிடன்ட் (antiakcitant) பைட்டோ நியூட்ரியன்ட் (paitto nutrient) போன்ற பல ஊட்டச் சத்துகள் நனிசைவ உணவில் நிறைந்துள்ளதை உளப்பூர்வமாக உணரும் சீனர்கள் ஊர்வன எல்லாம் உண்பதற்கு உகந்தவை என்ற தமது உணவு முறையில் அஜீரணமடைகின்றனர்.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொன்னையா விவேகானந்தன்

# ஆசிரியரும் பொறுப்புகளும்

06

ஒரு சமுதாயத்தில் பெறுமதி மிக்க பொறுப்பு வாய்ந்த சமுதாயப் பணி ஆசிரியப் பணியாகும். ஒவ்வொரு சமுதாயத்திலும் இப்போதிருக்கும் சமுதாயத்தைச் செதுக்கியோர் ஆசிரியரே. அடுத்து வரவிருக்கும் சமுதாயத்தினரைச் செதுக்கிக் கொண்டிருப்பவரும் ஆசிரியரே.

சிறந்த ஆசிரியர்களே வலுவான தேசத்தை உருவாக்குகின்றனர்.

நல்லாசிரியர் எனப்படுவோர் நிறைவான பல தகுதிகளைக் கொண்டிருப்பினும் சூழலுக்கும் காலத்துக்கும் ஏற்ப, மாறுபடும் கல்விக் களங்களையும் பொறுப்புகளையும் நன்கு உணர்ந்திருத்தல் வேண்டும்.

ஆசிரியருக்கான பொறுப்புகள், பணியின் தன்மைக்கேற்ப மாறுபட்டிருப்பனவாகும். எனினும் இங்கே குறிப்பிடப்படுகின்ற பல பொறுப்புகள் எல்லா ஆசிரியருக்கும் பொதுவானவையே.

**ஒருங்கமைப்பாளர் (Facilitator)**

கல்விச் சூழலில் மாணவரது தேவையை உணர்ந்து கற்றலுக்கான வளங்களையும் கற்றலையும் அறிவுரைகளையும் உரிய பொழுதுகளில் முழுமையாக ஒருங்கமைத்து வழங்குவது ஆசிரியரது தலையாய பொறுப்பாகும். இப்பொறுப்பினை மூன்றாக வகுக்கலாம்.

வளங்கள் ஒருங்கமைப்பாளர் (Resource Facilitator)
கற்றல் ஒருங்கமைப்பாளர் (Learning Facilitator)
அறிவுரை ஒருங்கமைப்பாளர் (Counselor)

**வழங்கல் ஒருங்கமைப்பாளர்**

கற்றலின் போது வளங்களின் தேவை முதன்மையானதாக இருக்கும். மாணவரது கல்வித்தரத்தையும் தேவைகளையும் நன்கு தெரிந்து கொண்டு பொருத்தமான வளங்களைக் கண்டறிந்து மாணவருக்கு உரிய பொழுதில் ஒருங்கமைத்து வழங்குதல் முதன்மையான பணியாகும். வளங்களைத் தேர்வு செய்யும் போது பிற ஆசிரியரிடமும் கல்வி நிர்வாகத்திடமும் தேவையெனில் பெற்றோரிடமும் கலந்து பேசுதல் ஒருங்கமைத்தலை மேலும் பயனுள்ளதாக்கும். கற்றல் வளங்களைத் தேர்வு செய்யும்போது மாணவரது பாடத்திட்டமும் வரையறுக்கப்பட்ட இலக்குகளும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். குறித்த பாடத்திட்டத்துக்கோ இலக்குகளுக்கோ பெரிதும் பயன்படாத வளங்களை ஒருங்கமைத்து வழங்குவதைத் தவிர்த்தல் சிறப்பானது. வழங்கப்படும் வளங்களைச் சிறப்புறப் பயன்படுத்தும் வகையில் மாணவர் வழிகாட்டப்படல் வேண்டும்.

பொருத்தமான வளங்களைப் புதிது புதிதாகத் தேடுவதிலும் தேடியவற்றை மாணவரது தேவைக்கேற்றப வடிவமைப்பதிலும் எப்போதும் ஆர்வம் மிக்கவராக இருத்தல் வேண்டும்.

**கற்றல் ஒருங்கமைப்பாளர்**

ஓர் ஆசிரியரின் அதிகப் பொறுப்பு மிக்க பணியாக கற்றல் வழங்குதலைக் கருதலாம். ஆசிரியருக்கும் மாணவருக்கும் இடையேயான பணிசார் இணைப்பு இச்செயற்பாடு ஊடாகவே வலிமையும் பயனும் அடைகிறது.

வழங்குனர் என்பவர் வழிகாட்டியாகவோ அல்லது வகுப்பறைக் கலந்துரையாடலின் தலைமையாகவோ திகழ்வர். சிறந்த தலைமைத்துவத்தை வழங்குவதே கற்றல் ஒருங்கமைப்பாளரான ஆசிரியரின் தகுதியாகும். ஆளுமை மிக்க ஒருவராலேயே சிறந்த ஒருங்கமைப்பாளராகச் செயற்பட முடியும்.

கற்றல் ஒருங்கமைப்பாளர் பெரிதும் கவனிக்கப்பட வேண்டியவை கற்றலுக்கான உள்ளடக்கமும் வகுப்பறைச் செயன்முறைகளும் (content and process) ஆகும். இதற்கேற்ப கற்றல் ஒருங்கமைப்பாளர் இவ்வாறும் வகுக்கப்படுவர்.

- உள்ளடக்க ஒருங்கமைப்பாளர் (content Facilitator)
- செயன்முறை ஒருங்கமைப்பாளர் (process Facilitator)

இவ்விருவகை ஒருங்கமைப்பின் வேறுபாடுகளையும் கீழ்க்காணும் அட்டவணையில் காணலாம்.

| Process Facilitator How | Content Facilitator What |
|---|---|
| The methods and procedures | The subjects for discussion |
| How relations are maintained | The task |
| The t ools being used | The problem being solved |
| The rules or norms set | The decisions being made - the agenda items |
| The group dynamics | The goals |
| The climate | |

(தொடர்ச்சி அடுத்த இதழில்....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




குரு அரவிந்தன்

# சுவாமி விபுலானந்தர்

16

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் திருவுருவச்சிலை காரைதீவு முச்சந்தியில் உள்ள விபுலாநந்த சதுக்கத்தில் மிகவும் கம்பீரமாக நிமிர்ந்து நிற்கின்றது. 12 அடி உயரமான இந்த அடிகளாரின் சிலை 2014 ஆம் ஆண்டு பிரதிஸ்டை செய்யப்பட்டிருந்தது. சென்ற மே மாதம் 3ஆம் திகதி 2015இல் சுவாமி விபுலானந்தரின் 123வது பிறந்த தினவிழா மட்டக்களப்பில் கொண்டாடப்பட்ட போது அவரது உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டதுடன் சுவாமி விபுலானந்தர் பற்றிய சிறப்பு சொற்பொழிவும் அப்போது இடம் பெற்றது. உலகின் பல பாகங்களிலும் புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் அவரது 123 ஆவது பிறந்ததின விழாவை வெகுவிமர்சையாகக் கொண்டாடினர்.



ஈழத்தின் கிழக்குக் கரையில் உள்ள காரைதீவு என்ற சிற்றூரிலே மார்ச் மாதம் 27ஆம் திகதி 1892ஆம் ஆண்டு பிறந்த அடிகளாரது இயற் பெயர் மயில்வாகனம், இவர் கல்முனை மெதடிஸ்ட் பாடசாலை, மட்டக்களப்பு செயின்ற் மைக்கேல் உயர்தர ஆங்கில பாடசாலை ஆகியவற்றில் கல்வி கற்று தனது 16 வது வயதில் கேம்பிரிட்ஜ் சீனியர் பரீட்சையில் முதலாவது வரிசையில் தேர்ச்சி பெற்றார். 1911ஆம் ஆண்டு கொழும்பு சென்று ஆங்கில ஆசிரியர் பயிற்சிக்கழகத்தில் ஆசிரியப் பட்டமும், லண்டன் பல்கலைக்கழக பி.எஸ்.ஸி பட்டதாரியாகவும், 1916ஆம் ஆண்டு விஞ்ஞானக் கலையில் டிப்ளோமா பட்டமும் பெற்றார். பின்னர் யாழ்ப்பாணத்தில் விஞ்ஞான ஆசிரியராகக் கடமையாற்றினார். 1931 ஆம் ஆண்டில் தமிழ் நாடு சென்று, சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ்ப் பேராசிரியராகப் பொறுப்பேற்றார். பின்னர் தாய்நாடு திரும்பி இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ்ப் பேராசிரியராகவும் பணிபுரிந்தார். இவர் மதுரை தமிழ் சங்கம் நடத்திய தேர்வில் தோன்றி பண்டிதர் பட்டத்தையும் பெற்றார்.

1924 ஆம் ஆண்டு சித்திரை மாதம் பௌர்ணமி தினத்தில் சுவாமி சிவானந்தரால் சுவாமி விபுலானந்தர் என்ற துறவறப்பெயர் இவருக்கு வழங்கப்பட்டது. தமிழ் மொழி மீது கொண்ட ஆழ்ந்த பற்றுக் காரணமாக தமிழ் கல்வி வளர்ச்சியில் கவனம் செலுத்தினார். தமிழ் மாணவர்களின் எதிர்காலக் கல்வியைக் கவனத்தில் கொண்டு மட்டக்களப்பு உப்போடையில் சிவானந்த வித்தியாலயம், திருமலை இந்துக் கல்லூரி, மட்டக்களப்பு விவேகானந்த மகளிர் ஆங்கிலக்கல்லூரி, காரைதீவு சாரதா வித்தியாலயம், கொழும்பில் விவேகானந்த வித்தியாலயம் என்பன போன்ற கல்வி நிறுவனங்களை அவர் முன்னின்று நிறுவினார். இதைவிட கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, முதலிய இடங்களில் இராமகிருஷ்ண ஆச்சிரமங்களையும் நிறுவினார்.

ஆன்மீகவாத சன்மார்க்க நெறியாளராக வாழ்ந்த இவருக்கு மெல்பன் தமிழ்ச்சங்கம் 2006ஆம் ஆண்டில் முத்திரை வெளியிட்டுக் கௌரவித்திருந்தது. கனடாவில் வாழ்ந்த ஈழத்துப் பூராடனார், 1983ஆம் ஆண்டில் விபுலாந்த அடிகளின் வாழ்க்கை வரலாற்றைக் கூறும் 'விபுலாநந்தர் பிள்ளைத் தமிழ்' என்ற பிரபந்த நூலை வெளியிட்டிருந்தார். பஞ்ச கிருத்திய நுட்பத்தைக் கூறும் நடராஜ வடிவத்தைப் பற்றிய ஒரு நூலையும் இவர் வெளியிட்டு உள்ளார். கர்மயோகம், ஞான யோகம், விவேகானந்த ஞானதீபம் முதலியன அவரது மொழிபெயர்ப்பு நூல்களாகும்.

பண்டைத் தமிழரின் இசைக் கருவிகளாகிய வில்யாழ், பேரியாழ், மகரயாழ் செங்கோட்டியாழ் சகோடயாழ், என்பன பற்றி இவரது யாழ் நூல் கூறுகின்றது. அடிகளாரின் ஆராய்ச்சியின் பயனாக யாழ் நூல் தமிழுக்குக் கிடைத்தது. கரந்தை தமிழ்ச்சங்க ஆதரவில் திருக்கொள்ளம்புதூர்த் திருக்கோயிலில் 1947ஆம் ஆண்டு இந்த 'யாழ் நூல்' வெளியிடப்பட்டது. இவர் எழுதிய இன்னுமொரு நூல் 'மதங்க சூளாமணி'. இவர் ஆற்றிய சேவையினைப் பாராட்டி இலங்கை அரசு இவரைத் தேசிய வீரர் பட்டியலில் சேர்த்துள்ளது.

பாரிசவாத்தினால் பீடிக்கப்பட்ட சுவாமிகள் 1947ஆம் ஆண்டு ஆடி மாதம் 19ஆம் திகதி விண்ணுலகம் அடைந்தார். சிவானந்த வித்தியாலய முன்றலில் இவரது பூதவுடல் அடக்கம் செய்யப்பட்டது. அவரின் கல்லறை மேல்,

'வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ

வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலர் எதுவோ

வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல

உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது'

என்ற அவரால் பாடப்பட்ட அவரது கவிதா வரிகள் பொறிக்கப்பட்டுள்ளன. உண்மையான இதய சுத்தியோடு வாழ்ந்தவர்கள் மறைந்தாலும் மறக்கப்படமாட்டார்கள் என்பதற்கு சுவாமி விபுலானந்தரின் வாழ்க்கை வரலாறு சிறந்த உதாரணமாகும்.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக இசையை தமிழில் புகுத்திய பெருமைக்குரியவர் எம்.எஸ்.வி.

எம். எஸ். விஸ்வநாதனின் நினைவுகள் அவரது ரசிகர்களின் உள்ளங்களில் அலைபாய்ந்தபடியே உள்ளன. அவர் இசையமைத்த பாடல்கள் நெஞ்சை விட்டு நீங்கப் போவதில்லை என்பது ஒரு புறமிருக்க அவரைச் சுற்றியே வட்டமிடுகின்றன.

மனயங்கத் சுப்பிரமணியன் விஸ்வநாதன் என்ற இயற் பெயர் கொண்ட எம். எஸ். விஸ்வநாதன் பாலக்காட்டில் உள்ள எலப்புள்ளி கிராமத்தில் 1928 இல் பிறந்தார். இசையில் மகா பாண்டித்தியம் பெற்ற எம். எஸ். வி. கல்விக்காக பள்ளிக்கூடப் பக்கமே கால் வைத்தது கிடையாது. ஆனால் அவரது பேச்சுத் தெளிவும், திகைப்பும் நிறைந்தது. பல மொழி அறிந்த வித்தகர்.

4 வயதில் தந்தையை இழந்தவர். கண்ணனூரில் தாத்தா வீட்டில் வளர்ந்தார். தியேட்டர்களில் நொறுக்குத் தீனி விற்பார். நீலகண்ட பாகவதரிடம் இசை பயின்றார். 13 வயதில் திருவனந்தபுரத்தில் தனது முதல் மேடைக் கச்சேரியை நடத்தினார் எம். எஸ். வி. அன்பு மனைவி ஜானகி அம்மாள். கோபி கிருஷ்ணா, முரளிதரன், பிரகாஷ், அரிதாஸ் என நான்கு மகன்கள். லதா மோகன், மதுபிரசாத் மோகன், சாந்தி குமார் என மூன்று மகள்கள். எத்தனை சோதனைகள் வந்தாலும் இஷ்ட தெய்வமான முருகனை, எந்தக் கணமும் பேச்சுக்கு நடுவிலும் உச்சரிக்கும் வார்த்தையும் 'முருகா முருகா' தான்.



குரு நீலகண்ட பாகவதரிடம் பயின்று கர்நாடக கச்சேரியை தனியாகச் செய்திருக்கிறார். குருவுக்குத் தட்சணை கொடுக்க இயலாமல், அவருக்குப் பணி விடை செய்து அந்தக் கடமையை நிறைவேற்றியவர்.

நடிகர், பாடகராக வரவேண்டும் என்பது அவரது விருப்பம். அது நிறைவேறவில்லை. சினிமா கம்பெனியில் சர்வராக வேலை பார்த்தார். 1950 களில் எஸ். எம். சுப்பையா நாயுடு மற்றும் சி. ஆர். சுப்பாராமன் ஆகியோரிடம் உதவியாளராகப் பணியாற்றினார். பிறகு, இசையமைப்பாளர் சி. ஆர். சுப்புராமன் குழுவில் இவர் ஆர்மோனியக் கலைஞராகவும், டி. கே. ராமமூர்த்தி வயலின் கலைஞராகவும் சேர்ந்தனர்.

தன் குரு எஸ். எம். சுப்பையா நாயுடு இருக்கும் போதே அவருக்கு பாராட்டுக் கூட்டம் நடத்தி, பொற்கிழி அளித்தார். அவர் இறந்த பிறகு, தன் வீட்டிலேயே இறுதிக் கடமைகள் செய்தார். சுப்புராமனின் திடீர் மறைவால் பாதியில் நின்ற அவரது படங்களை இவர்கள் இருவரும் முடித்துக் கொடுத்தனர். "தேவதாஸ்". "சண்டி ராணி" படங்களின் இணை இசையமைப்பாளர்களாக அறிமுகமாயினர். 'பணம்' திரைப்படத்தில் ஆரம்பித்து 'ஆயிரத்தில் ஒருவன்' வரை 700 திரைப்படங்களுக்கு இணைந்து இசையமைத்தனர்.

எம். எஸ். விஸ்வநாதனும் ராமமூர்த்தியும் இணைந்து நூற்றுக்கும் மேற்பட்ட படங்களில் இசையமைத்துள்ளனர். ஆனால் எத்தனை படம் என்பதை துல்லியமாகப் பதிவு செய்து வைத்துக் கொள்ளவில்லை.

1952 இல் தொடங்கி 1965 வரையான 13 ஆண்டுகளில் இருவரும் இணைந்து காலத்தால் மறக்க முடியாத பல காவியப் பாடல்களைப் படைத்தனர். இருவரும் இணைந்து 100க்கும் அதிகமான திரைப்படங்களுக்கு இசையமைத்துள்ளனர். இது ஒரு மிகப் பெரிய சாதனையாகும். டி. கே. ராமமூர்த்தியைப் பிரிந்த பிறகு தனியாக 700ற்கும் மேற்பட்ட படங்களில் இசையமைத்தார் எம். எஸ். விஸ்வநாதன். கடைசியாக அவர் இசையமைத்த படம் 'சுவடுகள்'. 'கண்ணகி' படத்தில் நடிக்க ஆரம்பித்த எம். எஸ். வி., 'காதல் மன்னன்' 'காதலா... காதலா' உட்பட 10 படங்க – ளுக்கு மேல் நடித்துள்ளார். நகைச்சுவையிலும் கொடி கட்டியவர் எம். எஸ். வி. தமிழ். தெலுங்கு, மலையாளம், ஹிந்தி உட்பட பல மொழிகளிலும் 1,200 படங்களுக்கு மேல் இசையமைத்து உள்ளார். கிட்டத்தட்ட 1951 இல் ஆரம்பித்து 1981 வரை 30 வருடங்கள் எம். எஸ். வி.யின் இசை ராஜ்யம்தான்.

"நெஞ்சில் ஓர் ஆலயம்" படத்தில் இடம்பெற்ற 'முத்தான முத்தல்லவோ' பாடலை 20 நிமிடத்தில் இசையமைத்தார். "தமிழ், மலையாளம், இந்தி, கன்னடம் என 1,200 திரைப்படங்களுககு இசையமைத்துள்ளார்.

"கடந்து வந்த பயணத்தில் அவர் இசையமைப்பதை, பாடுவதை மட்டுமே சிரத்தையாய் மேற்கொண்டாரே தவிர, அவற்றைப் பதிவாக ஆவணப்படுத்துவதில் கவனம் செலுத்தவில்லை. தனது இந்த சாதனையை அவர் எந்த மேடையிலும் காட்டிக் கொண்டது கூட இல்லை.

தமிழ் சினிமாவில் மிக அதிகமாக, பீம்சிங், கிருஷ்ணன் பஞ்சு, ஏ. சி. திருலோகசந்தர், கே. பாலசந்தர் என நான்கு இயக்குநர்களிடம் வேலை பார்த்திருக்கிறார். அது தமிழ் சினிமாவின் பொற்காலம் ஆகும்.

சொந்தக் குரலில் பாடுவதில் பெரும் பிர பலம் அடைந்த மெல்லிசை மன்னர் உச்சஸ்தாயில் பாடிய பாடல்கள் பெரும்புகழ் பெற்றவை. 'பாசமலர்' படத்தில் ஆரம்பித்தது இந்தப் பாட்டுக் கச்சேரி.

உலக இசையை தமிழில் புகுத்திய பெருமை இவரையே சாரும். எகிப்திய இசையை 'பட்டத்து ராணி' பாடலிலும், பெர்சியன் இசையை 'நினைத்தேன் வந்தாய் நூறு வயது' பாடலிலும், ஜப்பானிய இசையை 'பன்சாயி காதல் பறவைகள்' பாடலிலும், லத்தீன் இசையை 'யார் அந்த நிலவு' பாடலிலும், ரஷ்ய இசையை 'கண் போன போக்கிலே கால் போகலாமா' பாடலிலும், மெக்சிகன் இசையை 'முத்தமிடும் நேரமெப்போ' பாடல்களின் மூலம் கொண்டு வந்தவர்.

வி. குமார், இளையராஜா, ரஹ்மான், கங்கை அமரன், தேவா, யுவன்சங்கர் ராஜா, ஜி. வி. பிரகாஷ் போன்ற அனைத்து இசையமைப்பாளர்களிடமும் பாடிய எம். எஸ். வி. தன் இசையறிவை பெரிதாக நினைத்துக் கொள்ளாமல் அடக்கமாக இருந்தவர்.

சினிமா இசையில் இருந்து அதிகமாக ஒதுங்கி ஆன்மீக இசையில் இருந்த எம். எஸ். வசந்தகுமாரி, பாலமுரளி கிருஷ்ணா, மகாராஜபுரம் சந்தானம், பாம்பே ஜெயஸ்ரீ போன்றவர்கள் மெல்லிசை மன்னரின் இசைக்குக் கட்டுப்பட்டு பாடி இருக்கிறார்கள்.●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரா. சம்பந்தன்



# கம்பன் காட்டிய காதல்!

வண்ணங்கள் படிந்திருந்த வளமான
மலர்சூடி எண்ணத்தைக் களவாடும்
இனியதோர் பூஞ்சோலை. திண்ணைக்
கிழவியைப் போல் திரும்புகின்ற
பக்கமெல்லாம் கண்ணைக்
கவந்திழுக்கும் கருவேல மரத் தருக்கள்.
புட்கள் பாட புதர்ப்பாம்பு நின்றாட பற்கள் தெரியப்
பழங்கடிக்கும் குரங்கினங்கள். அவை எச்சில் படுத்தி
எறிந்த பலாச்சுளையின் மிச்சம் கடித்துண்ண மேலூரும்
எறும்புலகம்.

கதிரொளியைக் கிளைக்கையால் எதிரியெனத் தடுக்கின்ற
முதிரை பாலை முதல் முகில் தடவும் மரங்களின் கீழ்
பூப்பறித்தான் ஓர் காளை. புதுத்தேனாம் காதலிக்கு.
காலையிலே புனலாட காட்டருவி நீரிறங்கி காலை நீர்
நனைக்க கருங்கூந்தல் அலை நனைக்க கூட்டம்
போட்டு அங்கே குதிக்கின்ற மீனெல்லாம் பிடிக்க
வந்ததெமை பெருமீன்கள் இரண்டென்று துடிக்கும்
மனம் பதறி தொலை தூரம் ஓடுமிரு கண்கொண்ட
காரிகையாள் கனநேரம் நீர்கிடந்தாள்'

தேடிவருவான் தேன் குடிக்கும் வண்டாக. கூடி
மகிழ்ந்திடலாம் குளிர்நீர்த் திரை மறைவில்.
என்றெல்லாம் நினைத்திருந்த எண்ணங்கள் கனவாக
கன்றொன்று தாய்தேடிக் காலடிகள் வைப்பது போல்
வழுக்கும் நிலம் கடந்து வாழ்வை வெறுத்தவர் போல்
அழுக்கில் புரண்டெழுந்து அசைகின்ற நண்டுகளின்
ஒழுக்கம் தவறிதோர் கோடுகளை மிதிக்காமல் மெதுவாய்
நடந்திட்டாள் புழுவாய் மனந்துடிக்க.

தனக்காகப் பூப்பறித்துத் தான் சேர்க்கும் காதலனை
மனக்கண்ணால் கண்டு மயங்கும் உடல் பொங்க
மெதுவாய் நடந்தாள். மெல்லப்போய் பின்புறமாய்
காந்தள் கையெடுத்து தாமரையின் பூவிரலால் அவன்
கண்பொத்தி நின்று விட்டாள் கதையொன்றும் பேசாமல்.

## யாரென்றான் காதலனும்.

உடனே கண்மறைத்த கையுதறிக் கலங்கிப்
பின்நகர்ந்தாள் காதலியாள். யாரென்றா கேட்கின்றீர்'
கோபமெனும் தீகொழுத்திச் சொல்மீது போட்டாளை
ஏனென்றான் காதலனும் ஏதும் அறியாமல்.

என்பெயரைச் சொல்லி விட்டுக் கையெடுக்கச்
சொல்லாமல் யாரென்றா கேட்கின்றீர் யான் பெற்ற
காதலரே. யாரெல்லாம் வந்து இங்கே பொத்திடுவார்
உம் கண்ணை? பொத்தியகை எனதென்று புரிந்து
கொள்ள முடியாத வித்தகரே எத்தனைநாள்
எத்தனைபேர் தொட்டாரோ உம் உடலை. ஆதலினால்
தானெனது பரிசம் பட்டவுடன் பாவம் உம் வாயில்
என்பெயரோ வரவில்லை

இது தானா உம் காதல்? இது தானா உம் அன்பு?
வேண்டாம் நீர் பறித்த நிலங்கிடக்கும் பூவெல்லாம்.
இன்னொருத்தி கையளைந்த உடலெல்லாம்
எனக்கெதற்கு? காதல் இனிவேண்டாம் காதலரே என்
வாழ்வில். உடலால் உள்ளத்தால் உள்ளிருக்கும்
எண்ணததால் கடல் போன்ற காமத்தை கட்டிவைக்கும்
நற்குணத்தால் ஒன்றுபட்டு என்னோடு ஒற்றுமையாய்
இல்லாத உமக்கெல்லாம் ஏன் காதல்?

தலையில் அடித்தழுதாள். தணல் போல மூச்சு விட்டாள். குடைக்குள்
மழை பெய்தால் கொண்டாட மனம் வருமா?

ஐங்குறு நூறு சொன்ன அழகான தமிழ் மரபை அப்படியே
பறித்தெடுத்து தனதென்றான் தமிழ்க் கம்பன். பூ கொய்யும்
படலமெனும் ஓர் பிரிவில் கொண்டு வந்து கண்காணக் கவி செய்தான்
கம்பன் தன் காவியத்தில். காதல் எது என்றால் இதுவன்றோ
உண்மையிலே.

போர் என்ன வீங்கும் பொருப்பு அன்ன
        பொலம் கொள் திண் தோள்
மாரன் அனையான் மலர் கொய்து
        இருந்தானை வந்து ஓர்
கார் அன்ன கூந்தல் குயில் அன்னவள்
        கண் புதைப்ப
ஆர்? என்னலோடும் அனல் என்ன
        அயிர்த்து உயிர்த்தாள்.

(கம்பராமாயணம் பால காண்டம் பூக்கொய் படலம்)

போர் என்ற உடனே அஞ்சாமல் மகிழ்ச்சியினால் வீங்குகின்ற மலை
போன்ற தொள்களும் மன்மதன் போன்ற அழகும் உடைய வீரன்
ஒருவன் தன் காதலிக்காக பூ பறித்துக் கொண்டிருந்தான். அவனை
மழை மேகம் போன்ற கூந்தலும் குயில் போன்ற குரலும் உடைய
அவன் காதலி பின்புறமாக வந்து கண்களைப் பொத்தினாள். உடனே
காதலன் யாரது என்று கேட்டான். என்னைத் தவிர வேறு யார் உன்
கண்களைப் பொத்துவார்கள்? என் பெயரைச் சொல்லி கையை
எடுக்கச் சொல்லாமல் நீ யாரென்று கேட்டதில் இருந்து தெரிகின்றது.
வேறு பெண்களும் உன் கண்ணைப் பொத்தி விளையாடி
இருக்கிறார்கள் என்று. பல பெண்களோடு இருந்து விட்டுத் தான் நீ
என்னைக் காதலித்து இருக்கின்றாய். நீ ஒழுங்கான மனிதன் இல்லை.
என்று கோபத்தில் தணல் போல சிவந்து பெரு மூச்சு விட்டாள்.
என்பது இந்தப் பாடலின் பொருள்.

இதே பிரச்சனை திருக்குறள் புலவி நுணுக்கம் என்ற அதிகாரத்திலும்
காட்டப்படுகின்றது. அங்கே காதலன் ஒருவன் தன் காதலி மீது தான்
கொண்ட உயர்ந்த அன்பைக் காட்டுவதற்காக எல்லாரையும் விட
உன்னிலே தான் எனக்கு மிகுந்த காதல் என்று சொல்லி விடுகின்றான்
உடனே அவள் அப்போ என்னை விட வேறு பலரிலும் உனக்கு
அன்பு இருந்திருக்கிறது. யார் அவர்கள்? என்று கோபித்துக்
கொண்டாள் என்பார் திருவள்ளுவர்.

யாரினும் காதலம் என்றேனா ஊடினாள்
யாரினும் யாரினும் என்று

(திருக்குறள் புலவி நுணுக்கம் - குறள் 4)

சங்க இலக்கியங்களும் பதினெண் கீழ்க் கணக்கு நூல்களும்
இதிகாசங்களும் காட்டும் காதல் வாழ்வில் மிகவும் உயர்ந்த ஒரு
ஒழுக்கத்தை நிலை நாட்டப் போராடியிருக்கின்றன என்பது மட்டும்
தெரிகின்றது.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனடா மூர்த்தி

# கண்டதைச் சொல்கிறேன் 25

ஜுலை மாத ஆரம்ப தினமே கனடா தினம் என்பதால் நம்மவர் முகப்புத்தக உலகும் சென்ற மாதம் கனடா தினத்தை வாழ்த்தி ஓய்ந்தது. அதன்பின் பெட்னா கொண்டாட்டங்கள், ஸ்வாஸ்னேகர் நடித்த ரேர்மினேற்றர் ஆங்கிலத் திரைப்படம், கமல்காசன் நடித்த பாபனாசம் திரைப்படம் என பல பொழுதுபோக்குப் பதிவுகள் முகப்புத்தகத்தை அடைத்துக் கொண்டிருந்தன. இவற்றிற்கிடையில்தான் நம்மவர் பலரையும் சினிமாப் பாடல்களால் உணர்ச்சிக் கட்டுக்குள் வைத்திருந்த தமிழகத்தின் இசையமைப்பாளர் எம்.எஸ். விஸ்வநாதன் அவர்களின் மறைவுச் செய்தியும் வந்தது.

எம்.எஸ்.வி.யின் மறைவை பலரும் அவரது திரைப்படப் பாடல்களை யூட்யுப்பில் இருந்து முகப்புத்தத்தில் பகிர்ந்து சோகம் அனுஷ்டித்தனர். நானும் அவர்களில் ஒருவனாகி துயர் பகிர்வதுபோல எம்.எஸ்.வி. இசையமைத்துப் பாடிய எனக்குப் பிடித்த பாடலான **'கண்டதைச் சொல்லுகிறேன்...** உங்கள் கதையைச் சொல்லுகிறேன்..." என்ற பாடலை என் பக்கத்தில் பதிந்திருந்தேன். *'கேரளாவில் தியேட்டர்களில் முறுக்கு விற்கும் சிறுவனாக வாழ்க்கையை ஆரம்பித்து, 1200 திரைப்படங்களுக்கு இசையமைத்த அவரது பாடல்கள் - அவை சினிமாப்பாடல்களாக இருந்தபோதிலும் - ஈழத்தமிழர்களின் வாழ்வோடும் கலந்தவை. அவர் இசையமைத்த 'அதோ அந்தப் பறவைபோல வாழவேண்டும்"* என்ற பாடல் *ஒருகாலத்தில் நம்மவர்கள் பலரும் கொண்டிருந்த போராட்ட உணர்வுக்குத் தாளம் போல் ஆனது. புலம்பெயர் ஈழத்தமிழர் சோகத்தை சொல்வதுபோல சமீபத்தில் அவர் பாடித்தந்த 'விடைகொடு எங்கள் நாடே..... பனைமரக் காடே.. மறுபடி ஒருமுறை பார்ப்போமா?"* என்ற *பாடல் புலம்பெயர் வாழ்வின் சோகக்குரலாக ஒலிக்கிறது"* என்றும் நான் என் முகப்புத்தகத்தில் எழுதியிருந்தேன். நான் மட்டுமல்ல பலரும் எம்.எஸ்.வி. குறித்து தத்தம் முகப்புத்தகத்தில் எழுதியிருந்தனர். தமிழகத்தின் திரைப்பாடலாசிரியர் ஒருவர் *'இந்த நூற்றாண்டில் அதிகம் வாசிக்கப்பட்ட ஆர்மோனியம் அடங்கிவிட்டது"* என்று கவித்துவமாக இரங்கல் தெரிவித்திருந்தார். 'உள்ளத்தில் நல்ல உள்ளம் உறங்கா- தென்பது வல்லவன் வகுத்ததடா" என்ற எம்.எஸ்.வி. பாடல் இந்த ஜுலைக்கு மிகப் பொருத்தமாக அமைந்து கொண்டது.

83 ஜுலைக் கலவர மீள் நினைவூட்டல் பதிவுகள் பலரது பதிவுகளில் ஆங்காங்கே தென்பட்டாலும், இலங்கைத் தேர்தல் நிலவரங்கள்தான் ஜுலை மாத முகப்புத்தகப் பதிவுகளை ஆக்கிரமித்தன எனலாம். ஈழப்பகுதியில் போட்டியிடும் கட்சிகள், தலைவர்கள் குறித்த பலதரப்பட்ட விமர்சனங்கள், கருத்துக்கள் இங்குள்ளவர்களின் முகப்புத்தகத்திலும் சூடு பிடிக்கின்றன.

இலங்கையின் தேர்தல் நிலவரப் பதிவுகளில் சிலவற்றை, ஆங்கிலத்தில் ரீடிங் பிற்வீன் லைன்ஸ் என்பார்களே அவ்வாறாக, 'வரிகளுக்கு இடையில்" படிக்கும்போது படு சுவாரஸ்யமாக இருக்கின்றன. உதாரணமாக தெஹிவளையில் முஸ்லிம்களின் இப்தார் நிகழ்வொன்றில் மஹிந்த ராஜபக்ச பேசும்போது *"நீங்களும் இறைவனைத்தான் நம்புகிறீர்கள், நானும் இறைவனை நம்புகின்றேன். இறைவன் உங்களுடைய செயல்களை பார்த்துக் கொண்டுதான் இருக்கிறான்"* என்று அங்கிருந்த முஸ்லிம்களைப் பார்த்துக் கூறினாராம். இது எப்பிடி இருக்கு?

சில பதிவுகள் மனதை உருக்கவும் செய்கின்றன. போராளிகள் சிலர் அங்கு தேர்தலில் போட்டியிடுவதையொட்டிய முகப்புத்தக விவாதம் ஒன்றில் ஒருவர் இட்ட பதிவை இதற்கு உதாரணமாகக் காட்டலாம். *'முன்னாள் போராளிகள் என்று அவர்களை பிரித்து காட்டுவதை நாம் முதலில் நிறுத்த வேண்டும் அவர்களும் இப்போது சாதாரண பொதுமக்களே.. இவ்வாறு முன்னாள் போராளிகள் என்று ஒரு வர்க்கம் உருவாக்கப்படுவதால் அந்த வகைக்குள் வரும் மனிதர்கள் எவ்வளவு கஸ்டங்களையும் மன உளைச்சல்களையும் அனுபவிக்க வேண்டியுள்ளது.. ஒரு வகையான கண்காணிப்பு வளையத்தினுள்ளேயே அவர்களின் வாழ்நாள் முடிய வேண்டும் என விரும்புகின்றீர்களா? அவர்களையும் உங்களைப்போல் என்னைப்போல் இயல்பாக வாழவிடுங்கள். இதை ஏன் உணர மறுக்கின்றீர்கள்?"* என்றிருந்த அந்தப்பதிவானது அரசியலையும் தாண்டிய மனிதாபிமான விருப்பு என்றே கணிக்கப்பட வேண்டும்.

இன்று முகப்புத்தத்தூடாக தன் விருப்புக்களுக்கு ஒத்த விருப்புடையவர்கள் ஒரு குழுவாகித் தொடர்புகளை ஏற்படுத்திவிட முடிகிறது. தமிழர் வரலாற்றில் ஆர்வம் கொண்ட ஒரு குழு முகப்புத்தகத்தில் இருக்கிறது. அது ராஜேந்திரச் சோழன் பதவியேற்ற ஆயிரம் ஆண்டு கொண்டாட்டங்களை தமிழகத்தில் செய்ய முனைந்து வருகிறது. அதற்காக அதன் உறுப்பினர்கள் பலரும் வரலாற்றாசிரியர்களுடன் இணைந்து தகவல்களைச் சேகரித்து முகப்புத்தில் பதிவுகளை இடுகின்றனர். அக் குழுவினரின் பதிவுகளிலிருந்து நான் பெற்ற தகவல் இது: கிபி 910இல் பாண்டியருடன் சிங்கள மன்னரும் இணைந்துதான் சோழருக்கு எதிராகப் போரிட்டனராம். கடைசியில் சோழரே வெற்றியடைந்தனர். தோற்றுப்போன பாண்டிய மன்னனின் மணிமுடியை பாண்டியர்கள் சிங்கள மன்னனிடம் பத்திரமாகப் பாதுகாக்கும்படி ஒப்படைத்து- விடுகின்றனர். இலங்கைக்கு சோழர் பலமுறை படையெடுத்தும் இலங்கையின் தென்பகுதிக்கு கொண்டு செல்லப்பட்ட அந்த மணிமுடியை கைப்பற்றமுடியவில்லை' ராஜராஜ சோழன் ஆட்சிக் காலத்தில்கூட முடியவில்லை, பிறகு என்ன நடந்தது? நான் மேலே சொன்ன முகப்புத்தகத்தில் பதியப்பட்டிருப்பதைக் கீழே தருகிறேன்:

*'1017ஆம் ஆண்டு ஒரு வேங்கை சோழ தேசத்தில் இருந்து புறப்படுகின்றது. வெற்றியை மட்டுமே ருசித்த அந்த வேங்கை இலங்கையில் கால் வைக்கின்றது. தெற்கு, வடக்கு, கிழக்கு, மேற்கு என முதல் முறையாக மொத்த இலங்கையையும் சோழர்களின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருகின்றது. வெறி கொண்ட அந்த வேங்கை தன் முப்பாட்டன் காலத்தில் பாண்டிய மன்னன் இலங்கையில் கொண்டு பத்திரப்படுத்திய அந்த மணிமுடியையும் கண்டுபிடிக்கின்றது. பல தலைமுறைகளாக இதை சோழர்களுக்கு கொடுக்காமல் வைத்திருந்த அந்த இலங்கை மன்னனின் மணிமுடியையும், அந்த அரசனின் மனைவி மணிமுடியையும் சேர்த்து பறித்துக் கொண்டு சோழ தேசம் நோக்கி வந்தது அந்த வேங்கை. ஆம்.. அந்த வேங்கையின் பெயர் "ராஜேந்திர சோழன்!'* என்கிறது அப்பதிவு.

ஆயிரம் வருடங்கள் ஓடிவிட்டன. தமிழனான பாண்டியனின் மணிமுடியை அந்தச் சிங்கள மன்னன் பெற்றுக்கொண்டபோது இந்தச் சோழவேங்கை பிறந்திருக்கவில்லை' அதன்பின்தான் அவன் பிறந்தான். வளர்ந்தான். வென்றான்.●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லண்டன் இலக்கிய சங்கமத்தின் நாவலர் பெருவிழா









லண்டனில் இயங்கும் இலக்கிய சங்கமத்தின் ஆதரவில் அண்மையில் நாவலர் பெருவிழா நடத்தப்பட்டது. சங்கமத்திம் அமைப்பாளர் திரு. தணிகாசலம் இதனை ஏற்பாடு செய்திருந்தார் லண்டன் சைவ முன்னேற்றச் சங்கத் தலைவர் திரு.இராமநாதன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் இலங்கை நாவலர் சபையின் ஆட்சிக்கு உறுப்பினரும், 1969ம் ஆண்டில் நாவலர் சிலையை நல்லூரில் நிறுவுவதற்கு முன்னின்று உழைந்த பெருமக்களில் ஒருவருமான திரு. ஐ. தி. சம்பந்தன் சிறப்பு விருது வழங்கி மதிப்பளிக்கப்பட்டார். விழாவில் சில ஒளிப்படங்களை இங்கு காணலாம்.

## இரவு வேலையில் ஈடுபடுபவர்களுக்கு புற்றுநோய் அபாயம்

ஸ்பெயின் நாட்டின் பார்சிலோனா நகரத்தை சேர்ந்த பல்கலைக் கழகம் ஒன்று இரவு நேர வேலையில் ஈடுபடுபவர்களுக்கு ஏன் புற்றுநோய் தாக்கும் சாத்தியம் அதிகமாக உள்ளது என்பது தொடர்பாக ஆய்வு ஒன்றை மேற்கொண்டது.

இதற்காக இரவு வேலை பார்க்கும் 100 பேரை தேர்ந்தெடுத்து, 24 மணி நேரத்தில் அவர்கள் கழிக்கும் சீறுநீரை ஆய்வு செய்தது. இந்த ஆய்வின் முடிவில் டெஸ்டோஸ்டிரோன் மற்றும் ஈஸ்ட்ரோஜன் ஹோமோன்கள் ஆகியவை தவறான நேரத்தில் குறிப்பிடத்தக்க அளவை விட அதிகமாக சுரப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இயல்பு வாழ்க்கையில் காலை 6 மணி முதல் 10 வரை சுரக்கும் இந்த ஹோர்மோன்கள், இரவு வேலை பார்ப்பவர்களுக்கு இரவு 10 மணி முதல் 2 மணிவரை அதிகளவில் சுரப்பது தெரியவந்துள்ளது. இதனால் இரவு வேலை பார்ப்பவர்களுக்கு மார்பக அல்லது புரோஸ்டேட் புற்றுநோய் தாக்கும் ஆபத்து அதிகம் என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## பூமி போன்ற புதிய கிரகத்தை கண்டறிந்த கெப்ளர் விண்கலம்

கெப்ளர் விண்கலம் ஒரு மாபெரும் விண் தொலைநோக்கியாகும். கடந்த 2009ம் ஆண்டு விண்ணில் செலுத்தப்பட்ட கெப்ளர் தற்போது பூமியிலிருந்து 150 மில்லியன் கிலோமீட்டர் தொலைவில் சுற்றி வலம் வருகிறது. இந்த தொலை நோக்கி இதுவரை 1028 கிரகங்களையும், 4661 கிரகம் போன்றவற்றையும் கண்டுபிடித்துத் தெரிவித்துள்ளது. இந்நிலையில் கெப்ளர் தொலைநோக்கி கிட்டத்தட்ட பூமி போலவே உள்ள ஒரு புதிய கிரகத்தை கண்டுபிடித்துள்ளதாகவும். இதுகுறித்த ஆய்வின் கடைசிக் கட்டத்தில் விஞ்ஞானிகள் இருப்பதாக நாசா தெரிவித்துள்ளது. இதற்கு கெப்ளர் 186எப் என்று பெயரிடப்பட்டது. இது பூமியலிருந்து 500 ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ளது. நம்மைப் போலவே உள்ள ஒரு கிரகமாக இது கருதப்படுகிறது. இது பூமியை விட பெரியது. அதேபோல இந்த ஆண்டு ஜனவரியில் கெப்ளர் 438 பி, 442 பி என மேலும் இரு கிரகங்களை கண்டுபிடித்தது. இதில் பி கிரகமானது பூமியை விட 12 சதவீதம் பெரிதாகும். 442 பி கிரகமானது 33 சதவீதம் பெரிதாகும். ஜுலை மாதத்தில் கெப்ளர் அதே நட்சத்திரத்தை 4 கிரகங்கள் சுற்றி வருவதாக கண்டுபிடித்தது. அந்த நட்சத்திரத்திற்கு கெப்ளர் 444 என பெயரிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயணனின் 'பின்லாந்தின் பசுமை நினைவுகள்' வெளியீடு













ஈழத்தின் மூத்த எழுத்தாளர்களில் ஒருவரும், சிறந்த கட்டுரையாளருமான இ. சிவலிங்கம் (உதயணன்) அவர்களால் கனடா 'தாய்வீடு' பத்திரிகையில் தொடர்ச்சியாக எழுதப்பட்டு வந்த 'பின்லாந்தின் பசுமை நினைவுகள்' நூல் வெளியீடு அண்மையில் மார்க்கம் நகரசபை மண்டபத்தில் 'காலம்' செல்வம் தலைமையில் நடைபெற்றது. தாய்வீடு பிரசுரமாக இந்நூல் வெளியிடப்பெற்றது. நிகழ்வின்போது எடுக்கப்பட்ட சில ஒளிப்படங்களை இங்கு காணலாம்.

# குழந்தை ம. சண்முகலிங்கத்தின் 'ஆரொடு நோகேன்' நாடக எழுத்துரு நூல் வெளியீடு







ஈழத்தின் புகழ்பூத்த நாடகவியலாளரும் யாழ். பல்கலைக்கழகத்தில் நாடகத்துறைப் பொறுப்பாளராக பணியாற்றியவருமாகிய குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களின் 'ஆரொடு நோகேன்' நாடக எழுத்துரு நூல் வெளியீடு கடந்த மாதம் யாழ். மத்திய கல்லூரி தம்பர் மண்டபத்தில் திரு. செ. செல்வகுமார் தலைமையில் நடைபெற்றது. வடமாகாண அழகியல் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் மதிவானி விக்னராஜா இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். திருவாளர்கள் எஸ். கே. எழில்வேடந்தன், ஜோன்சன் ராஜ்குமார், க. திலகநாதன் ஆகியோர் சிறப்புரை, விமர்சன உரை ஆகியவற்றை நிகழ்த்தினர் நூலாசிரியரின் பதிலுரையினையடுத்து, நூலின் முதற் பிரதியை சமூக செயற்பாட்டு மைய இணைப்பாளர் ந. சுகிர்தராஜ் பெற்றுக்கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிராம்டன் தமிழர் அமைப்பின் 'ஈழம் சாவடி'














பிராம்டன் நகரில் வருடாந்தம் கோடை விடுமுறையின்போது நடைபெறும் CARABRAM பல்கலாசார விழா குறுகிய காலத்தில் மிகப் பிரபல்யமான ஒரு நிகழ்வாக வடிவம் கொண்டுள்ளது. இங்கு, பிராம்டன் தமிழ்ச் சங்கம் அமைக்கும் 'ஈழம் சாவடி' (EELAM PAVLION) தமிழரின் பாரம்பரியத்தையும் கலை கலாசாரத்தையும் வெளிப்படுத்தும் ஒரு களமாக அமைந்து வருகின்றது. கடந்த மாதம் நடைபெற்ற 'ஈழம் சாவடி' விழாவின்போது எடுக்கப்பட்ட சில ஒளிப்படங்கள் வாயிலாக இவ்விழாவினைத் தமிழர் தகவல் வாசகர்கள் தரிசிக்கலாம்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பான் அமெரிக்க (PAN AM) விளையாட்டு விழாவின் ஆரம்பமும் இறுதியும்



ரொறன்ரோவில் கடந்த மாதம் 10ம் திகதி முதல் 26ம் திகதி வரை நடைபெற்ற Pan Am விளையாட்டு விழா ஆரம்ப நாளின்போது பிரதமர் ஸ்டீபன் காப்பர் கலந்து கொண்ட நிகழ்வையும், இறுதி நாளன்று ரொறன்ரோ நகர முன்றலான நேதன் பிலிப் சதுக்கத்தில் இசை நிகழ்ச்சிகள் நடைபெறு வதையும், பெருமளவிலான மக்கள் இங்கு திரண்டிருப்பதையும் இங்குள்ள படங்கள் வழியாகக் காணலாம்.






# நீத்தார் நினைவு

## கனடாவின் முதலாவது தமிழ் வழக்கறிஞர் ஜெகன் மோகன்



கனடாவின் முதலாவது தமிழ் வழக்கறிஞராக 1984ம் ஆண்டில் பட்டம் பெற்று கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக கனடாவில் முன்னணிச் சட்டவாதியாகத் திகழ்ந்த திரு. ஜெகன் மோகன் சிறிது கால சுகவீனத்தின் பின்னர் கடந்த மாதம் (ஜுலை) 8ம் திகதி காலமானார். 1973ம் ஆண்டில் இலங்கையில் வழக்கறிஞராகச் (Advocate) சித்திபெற்று பிரபல வழக்கறிஞர் ஸி. ரங்கநாதன் கியு. ஸியின் கீழ் பயிற்சி பெற்ற இவர், இலங்கையில் 1983ல் தமிழருக்கெதிராக இடம்பெற்ற இனப்படுகொலையையடுத்து 1984ம் ஆண்டு கனடாவில் குடியேறினார்.

கனடா தமிழீழச் சங்கம் (TESOC), மற்றும் தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக்கான கனடிய நிறுவனம் (CAFTAR) என்னும் வரிச் சலுகையுள்ள தர்ம ஸ்தாபனம் ஆகியவற்றின் ஸ்தாபகர்களில் ஒருவரான திரு. ஜெகன் மோகன், இந்த அமைப்புகளின் ஆரம்ப காலச் செயலாளராகவும் சட்டத்துறை ஆலோசகராகவும் பணியாற்றியது மட்டுமன்றி இவற்றின் யாப்பினையும் உபவிதி - களையும் தயாரித்தவராவார். 1990களின் இறுதியில் றிச்மன்ட்ஹில் இந்து ஆலய அறங்காவலர்களில் ஒருவராகவிருந்த இவர், அச்சபையில் கூடியளவு இலங்கைத் தமிழர் இடம்பெறும் வகையில் புதிய யாப்பினைத் தயாரித்து அதனை நிறைவேற்றியவராவார்.

தமிழரசுக் கட்சியின் மூளை என வர்ணிக்கப்பட்டவரான தமிழர் சுயாட்சிக் கழக நிறுவனரும் காவலூர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான (அமரர்) வி. நவரத்தினம் - பரமேஸ்வரி தம்பதியரின் இரண்டாவது புதல்வரான ஜெகன் மோகனின் பதினைந்து வரையான ஆங்கிலக் கட்டுரைகள் தமிழர் தகவலின் ஆண்டு மலர்களில் இடம்பெற்றுள்ளன.

தமிழர் தகவலின் பத்தாவது ஆண்டு விருது (2001ம் ஆண்டு) விழாவில் திரு. ஜெகன் மோகனும் அவரது துணைவியார் சட்டத்தரணி தெய்வா மோகனும் சாதனையாளர் விருதுடன் தங்கப் பதக்கமும் சூட்டி மதிப்பளிக்கப்பட்டனர். மோகன் - தெய்வா தம்பதியரின் ஏகபுதல்வரான ராஜேஷ் மோகனும் தமது பெற்றோர் மற்றும் தாய்-தந்தைவழிப் பாட்டனார்களை அடியொற்றி இளம் சட்டவாதியாகக் கனடாவில் தொழிலை ஆரம்பித்துள்ளார். - திரு

(தமிழர் தகவல் விருதினை ரொறன்ரோ மேயராவிருந்த பாபரா ஹோல் அவர்களிடம் ஜெகன் மோகன் பெற்ற வேளையில் எடுக்கப்பெற்ற ஒளிப்படம் மேலே பிரசுரிமாகியுள்ளது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Dr. Shan A. Shanmugavadivel & Associates

## டாக்டர் அ. சண்முகவடிவேல்



* Orthodontics * Implants * Cerec Crowns

பற்களை ஒழுங்கு செய்தல், 'இம்பிளான்ற்' சிகிச்சைகளில் கனடாவில் பயின்ற பல வருட அனுபவமுள்ள குடும்ப பல் வைத்தியர்.

**MONDAY - SATURDAY**


**(416) 266-5161**

(Near Kennedy Subway - Rainbow Village Building)

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**

2466 Eglinton Avenue East, Unit #7
Scarborough, Ontario M1K 5JB

SABESAN'S Choice



தனி மரத்தினாலான நிலம், நிலவிரிப்பு
சுவருடன் இணைந்த அலுமாரிக் கதவுகள்
யன்னல், கதவு புதுப்பித்தல்
ஆகிய வேலைகளில் தன்னிகரற்றவர்
"விருதுபெற்ற தொழிற்றுறை நிபுணர்"

**Laminate, Mirror, Panel, Closet Droos
Carpet, Hardwood, Tiles, Granite Flooring
Windows + Doors, Kitchen + Bath
Renovation or NEW!!!!**



*Sabesan's Choice*

**416 605 1990**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Less Payment Higher Return

100K - Term Life Insurance for 20 years

| AGE | 20 | 25 | 30 | 35 | 40 | 45 | 50 |
|---|---|---|---|---|---|---|---|
| Monthly Payment - Male | $12.69 | $12.78 | $12.87 | $14.22 | $17.64 | $25.65 | $39.33 |
| Monthly Payment - Female | $10.80 | $10.80 | $10.89 | $12.75 | $14.40 | $18.99 | $28.44 |

100K - Whole Life Insurance

| AGE | 20 | 25 | 30 | 35 | 40 | 45 | 50 |
|---|---|---|---|---|---|---|---|
| Monthly Payment - Male | $43.15 | $48.90 | $57.87 | $68.44 | $81.22 | $103.65 | $122.28 |
| Monthly Payment - Female | $39.00 | $43.15 | $52.20 | $61.76 | $71.07 | $88.33 | $106.78 |

2 வருடங்களுக்கு
ஒரு தடவை உங்கள் ஆயுள்
காப்புறுதியை மீள்பரிசீலனை
செய்தல் அவசியம்!

இலவச ஆலோசனைகளுடன்
பூரண விளக்கம் தருகின்றோம்

- Drug, Dental and Medical plan
- Mortgage and Travel Insurance
- RRSP - Loan and Investments
- RESP - Education Saving Plan
- Life Insurance - Term, Whole life
- Disability Insurance
- Critical Illness Insurance
- Non-Medical Insurance - Age 40 to 85

**Critical Illness Insurance**

கொடிய நோய்கள் வராது விட்டால் கட்டிய பணம் முழுவதும் 65 வயதில் திருப்பித்தரப்படும்.

கட்டிய பணத்திற்கு முழு உத்தரவாதம் உள்ளது



Ideas to simplify your Family protection

## Mogan Selliah

Insurance Advisor - Royal Brokers

**Direct: 416.569.3200**

Email: moganselliah@gmail.com

**Non Medical Insurance**

குறைந்த கட்டணத்தில் 85 வயது வரையிலான மருத்துவப் பரிசோதனை அற்ற காப்புறுதி

**RESP கல்வி சேமிப்புத் திட்டம்**

பிள்ளைகளின் உயர்கல்வி சேமிப்புத் திட்டத்தின் மூலம் அரச மானியமாக $9200 வரை பெறமுடியும்

Royal Brokers · RBC Insurance · Industrial Alliance · Assumption Life · Sun Life Financial · Equitable Life · La Capitale · BMO Insurance

**Knowledge. Passion. Results.**



# Computek College

Est. 1991

BUSINESS · HEALTH CARE · TECHNOLOGY

Registered as a private career college under the Private Career Colleges Act, 2005



## DIPLOMA COURSES

| | |
|---|---|
| Enterprise Network Engineering | 50 wks |
| Community Services Worker | 50 wks |
| Int. Application Development | 50 wks |
| Early Childcare Assistant | 38 wks |
| Network Engineering | 35 wks |
| Accounting & Payroll Admin | 35 wks |
| Personal Support Worker | 32 wks |
| Medical Office Admin | 28 wks |
| Computerized Accounting | 26 wks |
| Business Administration | 26 wks |

**WWW.COMPUTEK.EDU**

**Toronto Campus**
301-2347 Kennedy Rd.
416.321.9911

**Markham Campus**
202-7 Eastvale Dr.
905.471.3344

**Scarborough Campus**
248-2390 Eglinton Ave. E.
416.285.9941

**Are you unemployed or under-employed?**
Are you receiving or received EI?
Re-entering workforce after Maternity or Parental leave?

Second Career provides laid-off workers with skills training to help them find jobs in high-demand occupations in Ontario

**SECOND CAREER**
**& OTHER FUNDING OPTIONS AVAILABLE**
**PLEASE CALL FOR DETAILS**

*Financial assistance may be available for those who qualify*

**NOW ACCEPTING INTERNATIONAL STUDENTS!**



Computek College is approved as a Designated Learning Institution (DLI) by Citizenship and Immigration Canada (CIC)

## PART-TIME COURSES (WEEKEND / EVENING)

Bank Teller, MS Office
Food Handler, Food Service Worker
AccPac, Simply Accounting, Quick books
Exam Prep: A+, MCSA, MCSE
ICDN 1, ICDN 2, Canadian Securities Course
C/C++, C#, Java, VB.net, HTML, SQL
Medical Coding & Billing, CPR & First Aid

* *These programs do not require approval under the Private Career College Act, 2005*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நக்கீரன்

# என்றுமுள்ள செந்தமிழ் 87

## மாயவன் குழலோசை கேட்போம் அல்லமோ?

சென்றமுறை படித்த பாடலை மீளப்படித்து விட்டு அதன் பொருளைக் காண்போம்.

கன்று குணிலாக் கனி உதிர்த்த மாயவன்

இன்றுநம் ஆனுள் வருமேல் அவன் வாயில்

கொன்றையம் தீங்குழல் கேளாமோ' தோழீ' (ஆய்ச்சியர் குரவை மாயவன் பாடல்)

(1) தோழீ – தோழியே இனியாம்

கன்று குணிலாக் கனி உதிர்த்த மாயவன் இன்று நம் ஆனுள் வருமேல் – ஆன் கன்றினைக் குறுந்தடியாகக் கொண்டு விளவினது கனிகளை உதிர்த்தவனாகிய மாயவன் இற்றைநாள் நமக்கு இரங்கி நமது ஆனிரைக்குள் வருவான்,

அங்ஙனம் வந்தால் அவன் வாயில், கொன்றை அம் தீம் குழல் கேளாமோ – அம் மாயவனுடைய திருவாயின்கண் வைத்து இசைக்கின்ற கொன்றையங் குழலோசையை யாம் கேட்போம் அல்லமோ'

மரத்தடியிலே மேய்ந்து கொண்டிருந்த கன்றினைக் குறுந்தடியாகக் கொண்டு, விளாங்கனியை உதிர்த்த மாயவன், நம் வழிபாட்டின் காரணமாக இங்கு வந்தால் அவன் வாயிலிருந்து வரும் கொன்றையால் ஆகிய இனிய குழல் ஓசையைக் கேட்போம் அல்லவா?

பாம்பு கயிறு ஆக் கடல்கடைந்த மாயவன்

ஈங்குநம் ஆனுள் வருமேல், அவன் வாயில்

ஆம்பலம் தீங்குழல் கேளாமோ' தோழீ' (ஆய்ச்சியர் குரவை மாயவனைப் பாடல்)

(2) பாம்பு ........ தோழீ

பாம்பு கயிறாக் கடல் கடைந்த மாயவன் – வாசுகி என்னும் பாம்பினையே கடை கயிறாகக் கொண்டு திருப்பாற் கடலைக் கடைந்து தேவர்களுக்கு அமிழ்தம் ஈந்த திருமால்

ஈங்கு நம் ஆனுள் வருமேல் – இவ்விடத்தே நமக்கிரங்கி நம்முடைய ஆனிரைக்குள் வருகுவன், அங்ஙனம் வந்தால்

அவன் வாயில் ஆம்பலந் தீங்குழல் கேளாமோ – அவனுடைய திருவாயின்கண் வைத்திசைக்கின்ற ஆம்பற் குழலின் இன்னிசையை யாமும் ஒரு தலையாகக் கேட்போம்.

வாசுகி என்னும் பாம்பைக் கயிறாகக் கொண்டு பாற்கடலை கடைந்த மாயவன், நம் வழிபாட்டின் காரணமாக இங்கு வந்தால், அவன் வாயிலிருந்து வரும் ஆம்பலால் ஆகிய குழலிருந்து வரும் இனிய இசையைக் கேட்போம்.

இதனைத் தொடர்ந்து மாயவனைப் போற்றியும் புகழ்ந்தும் ஆய்ச்சியர் ஆடிப் பாடுகின்றனர்.

தையல் கலையும் வளையும் இழந்தே

கையில் ஒளித்தாள் முகம் என்கோ' யாம்

கையில் ஒளித்தாள் முகம் கண்டு அழுங்கி

மையல் உழந்தான் வடிவு என்கோ' யாம் (ஆய்ச்சியர் குரவை மாயவனைப் பாடல்)

தையல் கலையும் விளையும் இழந்தே – தனது துகிலையும் வளையலையும் இழந்தமையால்

கையில் ஒளித்தாள் தையல் முகம் என்கோ யாம் – நாணத்தால் தனது கையால் பொத்திக் கொள்ளப்பட்ட நப்பின்னையினது முகம் என்று சொல்லுவோமா?

யாம் அல்லது கையில் ஒளித்தாள் முகம் கண்டு – நாணத்தால் தனது கையால் முகத்தைப் பொத்திக் கொண்டவளுடைய அந்த முகத்தைக் கண்டு

அழுங்கி – இரங்கி மையல் உழந்தான் – காமத்தால் மயங்கி அல்லலுற்ற அக்கண்ண பெருமானுடைய்

வடிவு என்கோ யாம் – உருவம் என்று சொல்வோமா? யாம், இவற்றுள் அழகான் மிக்கது யாதென்றறிகிலோம்.

அவன் நெஞ்சைக் கவர்ந்த அப்பெண், தன் புடவையையும் வளையல்களையும் இழந்து, தன் கையால் மறைத்தாள், அவளின் முக அழகை எங்ஙனம் கூற முடியும்? அவ்வாறு கையால் ஒளித்தவனின் முகத்தைக் கண்டு வருந்தி, அவள் மேல் மையல் கொண்டாளே அவள் அழகை எவ்வாறு புகழ முடியும்?

உலகமொழிகளுள் தமிழ் மொழி மிகத் தொன்மை வாய்ந்தது என்பதை அறிவோம். செம்மொழித் தகைமை பெற்ற ஆறு மொழிகளில் தமிழும் ஒன்றாகும்.

அவ்வாறே தமிழ் இசையும் முத்தமிழும் 3000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே நன்கு வளர்ந்து வந்துள்ளன. தமிழிற்கு பழைய இலக்கணமாக அமைந்த தொல்காப்பியம் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் பாலை போன்ற நிலங்களுக்குரிய யாழ் பற்றிக் கூறுகிறது.

இசை பற்றிய நூல்களுள் மறைந்தன போக எஞ்சியவற்றுள் பரிபாடலில் பாடல் இசைத்தோர் அவற்றிற்குரியப் பண் அமைத்தோர் போன்ற செய்திகள் கிடைக்கின்றன.

அடுத்து கிபி இரண்டாம் நூற்றாண்டில் இயற்றப்பெற்ற சிலப்பதிகாரம் ஒரு இசைச் சுரங்கம். இதில் இசை மற்றும் நாட்டியம் பற்றிய நுணுக்கங்கள் மிகுதியும் காணப்படுகின்றன. பல நூற்றாண்டுகட்குப் பின்னர் சிலப்பதிகாரத்திற்குப் பொருள் கண்ட அடியார்க்கு நல்லாரும் அரும்பதனாரும் இசை மற்றும் நாட்டியம் பற்றி ஏராளமான குறிப்புகளை அளித்திருக்கின்றார்கள்.

சங்கத்தமிழானது இயல், இசை, நாடகமென மூன்று வகையாகும். இதில் இசை என்பது தமிழிசையாகும். பழந்தமிழ் மக்கள் வேறு இன மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்வதற்கு முன்பே இசையும் அதோடு இணைந்த கூத்தும் உருவாகி வளர்ந்து வந்தன. இசை, கூத்து ஆகியவற்றின் கலை நுட்பங்களை விளக்கும் இலக்கணத் தமிழ் நூல்கள் எழுந்தன. இந்நூல்கள் எழுதப்பட்ட காலம் முச்சங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்றுமுள்ள.. (23ஆம் பக்கத்திலிருந்து)

காலமென அறியப்படுகிறது. தமிழர் இசையும் கூத்தும் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே செவ்விய கலைகளாக விளங்கின என உறுதியாகக் கொள்ளலாம்.

ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்திலும் தமிழிசை பற்றிய பல தரவுகள் கூறப்பட்டுள்ளன. கிபி 6 னி 10 ஆம் நூற்றாண்டு வரை தோன்றிய தேவார காலத்தில் அப்பர், திருஞானசம்பந்தர், மாணிக்கவாசகர் போன்ற நாயன்மார்கள் தோன்றி பழந்தமிழிசைக்குப் புத்துயிர் அளித்தனர். தேவாரம் திருவாசகம் போலவே வைணவ ஆழ்வார்கள் பன்னிருவரும் பாடிய நாலாயிர திவ்யப் பிரபந்தம் பண்ணோடு பாடப் பெற்றவை ஆகும்.

தமிழ் இசைக்கு இலக்கணம் வகுத்த முதல்நூல் அகத்தியம் என்று அறிஞர்கள் சொல்கிறார்கள். ஆனால் அந்த அரிய நூல் இப்போது கிடைக்கவில்லை.

அகத்தியத்திற்கு முன்னரும் பல இசை நூல்கள் இருந்திருக்க வேண்டும். அகத்தியத்திற்குப் பின்னர் தோன்றிய இசை நூல்களான பெருநாரை, பெருங்குருகு, முதுநாரை, முதுகுருகு, பஞ்சபாரதீயம் பதினாறுபடலம் வாய்ப்பியம், குலோத்துங்கன் இசைநூல் போன்ற நூல்களும் கால வெள்ளத்தில் அழிந்து போயின. எஞ்சிய நூல்கள்பற்றி இடைக்கால உரையாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

சிலப்பதிகாரத்தில் காணப்பட்ட இசை நுணுக்கங்களை சுவாமி விபுலானந்த அடிகள் 14 ஆண்டுகள் மேற்கொண்ட இயலிசை ஆய்வின் அடிப்படையிலும் சிலப்பதிகாரத்தில் யாழ் பற்றிய குறிப்புகள் அடிப்படையிலும் யாழ்நூல் என்ற தலைசிறந்த இசைத் தமிழாய்வு நூலை எழுதி தமிழிசையை உலகறியச் செய்தார். இந்த நூல் பழந்தமிழரின் இசை நுட்பங்களை ஆராய்ச்சி முறையாக விபரிக்கும் ஒரு முதல் நூல் ஆகும்.

யாழ் நூலில் இசை நரம்பியல், பாலைத் திரியியல், பண்ணியல், தேவார இயல், ஒழிபியல்

என்ற பகுதிகளில் இசை இலக்கணங்கள் பற்றிய செய்திகள் உள்ளன. அந்நூல் இசை

இலக்கிய ஆய்வாகவும் அமைந்துள்ளது.

பண்ணியலில் பாலை யாழ், குறிஞ்சி யாழ், மருத யாழ், நெய்தல் யாழ் என்ற நாற்பெரும் பண்களும் அகநிலை, புறநிலை, அருகியல், பெருகியல் என்னும் நால்வகை வேறுபாடுகளினால் ஒவ்வொன்றும் நான்காகி 16 பண்கள் ஆகும் நிலை கூறப்பட்டுள்ளது.

தேவார இயலில் 103 பண்களில் தேவாரப் பாடலில் காணப்படும் பண்கள், கட்டளை விவரங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

பழந்தமிழிசை மரபிற்கும் வடநாட்டிசை மரபிற்கும் அமைந்த தொடர்பு நிலையையும் விளக்கியுள்ளார். தொடர்ந்து ஆய்ச்சியர் குரவைப் பாடல்கள் சிலவற்றைப் பார்ப்போம். (வளரும்)

# Permanent HOV toll lanes?

The temporary High Occupancy Vehicle lanes set up in the Toronto and Hamilton area for the Pan American Games will not become permanent, but they will likely return in the form of toll lanes.

Premier Kathleen Wynne says she wants to apply lessons learned from the HOV lanes set up this summer on the Queen Elizabeth Way, some 400-series highways, the Gardiner Expressway and Don Valley Parkway to creating toll lanes.

Wynne says the Liberals have made it clear they intend to create toll lanes that would let motorists without any passengers pay to use HOV lanes normally reserved for vehicles with at least one passenger.

She says money from new toll lanes would be an important source of revenue to help fund the Liberals $130-billion, 10-year transit and infrastructure plan.

Toronto Mayor John Tory says the city must eventually decide whether to toll lanes on the municipally governed Gardiner Expressway and Don Valley Parkway, but the 235 kilometres of temporary HOV lanes will be removed after the Games end in August.

Tory says the city will wait until the province decides where its new toll lanes will go so the two governments could create what he calls a sensible network for drivers.

# தேர்தல் செலவு மோசடியில் கொன்சர்வேடிவ் கட்சியின் முன்னாள் எம். பி குற்றவாளி

2008ம் ஆண்டு நடைபெற்ற கனடிய பொதுத்தேர்தலில் பீற்றர்பரோ தொகுதியில் வெற்றிபெற்ற கன்சர்வேடிவ் கட்சியின் முன்னாள் எம். பி டீன் டெல் மாஸ்ட்ரோ, தேர்தல் செலவு கணக்கில் ஏமாற்று மோசடி புரிந்த குற்றச்சாட்டில் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளார். விசாரணை நடத்திய ஒன்ராறியோ நீதிமன்றம் இவருக்கு ஒரு மாத சிறைத்தண்டனை விதித்தது. ஆயினும் இவர் தீர்ப்பை எதிர்த்து மேன்முறயீடு செய்தமையால், ஐயாயிரம் ரூபா பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

# கடந்தாண்டின் புதிய அகதிகள் ஆறு கோடி ஆட்கள்

உலகளவில் பல்வேறு அடக்கு முறைகள் மற்றும் போர்கள் காரணமாக சொந்த வாழ்விடங்களை விட்டுப் பலவந்தமாக வெளியேறியவர்களின் எண்ணிக்கை முன்பு எப்போதையும் விட மிக உயர்ந்திருப்பதாக ஐ. நா தெரிவித்துள்ளது. கடந்தாண்டு (2014) மட்டும் ஆறு கோடி ஆட்கள் அளவில் பலவந்தமாக வாழ்விடங்களை விட்டு வெளியேறும்படி செய்யப்பட்டிருக்கிறார்கள். இவர்களின் சரி பாதிக்கும் அதிகமானவர்கள் சிறார்கள். சிரிய நாட்டு மோதல்களிலேயே அதிகமானவர்கள் இடம்பெயர்ந்து உள்ளனர். நாடுகளின் அரசாங்கங்கள் எந்தக் கவலையும் இல்லாமல் நினைத்த மாத்திரத்தில் போர்களைத் தொடங்குவதும், சர்வதேச சமூகம் அதனைத் தடுக்க முயலாதிருப்பதுமே அகதிகள் தொகை அதிகரிப்புக்குக் காரணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உறவுகள் பிரியும்போது மலைகளையே சுமக்கவேண்டிவருகிறது

# உங்கள் உறவுகளின் இறுதியாத்திரையை முறையாகவும், இலகுவாகவும் அமைத்திட நாங்கள் உதவுகிறோம்





- மரண அறிவித்தல்கள்
  வீட்டிலிருந்த படியே விரும்பிய ஊடகங்கள் ஊடாக அறிவித்தல்களை வெளியிடவும்
- சமய சம்பந்தமான கிரியைகள் செய்பவர்களின் விபரங்களைப் பெற்றுக்கொள்ளவும்
- பூ அலங்காரங்கள், மாலைகள், பூப்பந்தல்களின் தெரிவுக்கும்
- விரும்பிய, பொருத்தமான Casket (மரணப்பேழை)களை பெற்றுக்கொள்ளவும்
- இணையத்தளத்தினூடாக நேரடி ஒளிபரப்புச் சேவையை பெற்றுக்கொள்ளவும்
- Slideshow உருவாக்கம் செய்யவும்
- உங்கள் கலாசார, பண்பாட்டு முறைப்படியே இறுதிச்சடங்குகளை ஒழுங்குசெய்வதற்கான ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளவும்
- உலகின் எப்பாகத்திலிருந்தும், எப்பாகத்திலும் Wreath (மலர்வளையம்) வைப்பதற்கான சேவையை பெற்றுக்கொள்ளவும்

MARANAM.COM

**HEAVEN CARES**

ADVISING FAMILIES ON YOUR LOVED ONE'S FINAL JOURNEY

www.maranam.com, E-Mail: info@maranam.com

Working With

Chapel Ridge

FUNERAL HOME INC.

PROVIDING PEACEFUL FINAL ARRANGEMENTS

8911 Woodbine Ave., Markham, ON L3R 5G1



Call: **Vilosan Sivatharman** B.Eng

Funeral Director

**416-993-0826**

Call: **Christeen Seevaratnam**

Funeral Counsellor

**416-258-6759**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்குத் தெரியும்,

நம்பிக்கையுடனான தரமான சேவைகள்..

தகுதியான வெற்றிகளுக்கான

தரமான தெரிவு



On high with your thoughts

**PRO MAR Ltd.**

**AWARDS & PROMOTIONS**

நகரின் முன்னணித் தமிழர் நிறுவனம்

இப்பொழுது
வீடு விற்பனைத்
துறையிலும்

**www.promarawards.com 416-291 2344**

585 Middlefield Rd Unit # 3, Scarborough, ON., M1V 4Y5














# கோவில் மாலைகள் மற்றும் பூஜை பொருட்கள்

**5633 Finch Ave East, Unit # 6, Scarborough, ON M1B 5K9**

**(416) 288-1419**

**சொரி பூக்கள், சரம் மற்றும் பூஜைக்கு தேவைப்படும் இலை வகைகள்**

| | | | |
|---|---|---|---|
| இறக்குமதி செய்யப்பட்ட கதம்ப சரம் | $ 2.00/ M | அறுகம் புல் | $ 3.00/bag |
| உள்ளூர் கர்னேஷன் சரம் | $ 2.00/M | வில்வம் இலை | $ 3.00/bag |
| மல்லிகைப்பூச்சரம் | $ 5.00/M | வேப்பிலை | $ 3.00/bag |
| கர்னேஷன் மலர்கள் | $ 0.20 each | Marukhalundu /Maru | $ 3.00 /bag |
| மல்லிகை மலர்கள் | $ 5.00/bag | மாவிலை | 10 per $ 1.00 |
| சம்பாகினி மலர்கள் | $ 3.00 /bag | வெற்றிலை | 10 per $ 1.00 |
| அறலி மலர்கள் | $ 3.00 /bag | வாழை இலை | $ 1.00 each |
| தாமரை மலர்கள் | $ 1.00 each | துளசி இலை | $ 3.00/bag |

Fancy Florist




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். கணேஷ்

# Pan Am Games

## "Together We Are One"

ரொறன்ரோவில் பிறந்த பாடகர் செரெமா ரைடர் இசைத்த "Together We Are One" என்ற பாடலுடன் ஜுலை 10ம் திகதி ஆரம்பமான சரித்திரப் பிரசித்தி பெற்ற ரொறன்ரோ Pam Am விளையாட்டு விழா இந்த 26ம் திகதி முடிவுக்கு வந்தது.

இந்த விளையாட்டுப் போட்டியின் முடிவில் 41 வித்தியாசமான கலாசார பேரணிகள் இடம்பெற்றன. ரொறன்ரோ மாநகரம் உலகின் பல்கலாசாரத்தையும் உள்வாங்கிய ஒரு கிராமம் என்பதை இந்நிகழ்ச்சி உலகுக்கு எடுத்துக் காட்டியது.

இதன் இறுதிநாள் முடிவு வைபவத்தை சுமார் நாற்பதினாயிரம் பொதுமக்கள் கண்டு களித்தனர். இவ்விழா ரொறன்ரோ நகரத்துக்கு ஒரு உயர்ந்த ஸ்தானத்தை ஏற்படுத்திக் கொடுத்தது மட்டுமல்லாமல், இனிவரும் ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்கு ரொறன்ரோ தகுதியானது என்பதை உலகுக்கு நிரூபித்துள்ளது.

சரித்திரத்தில் முதன்முறையாக தனது சொந்த மண்ணில் தனது திறமையை வெளிக்காட்டிய ஒரு களமாக இவ்விளையாட்டு விழா அமைந்தது. முதல் ஐந்து இடங்களையும் கைப்பற்றிய நாடுகளையும் பதக்கங்களையும் பார்ப்போம்.

| நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| அமெரிக்கா | 103 | 81 | 81 | 265 |
| கனடா | 78 | 69 | 70 | 217 |
| பிரேசில் | 41 | 40 | 60 | 141 |
| கியூபா | 36 | 27 | 34 | 97 |
| கொலம்பியா | 27 | 14 | 31 | 72 |

**இவ்விழாவின் சாதனைகளைப் பார்ப்போம்.**

- முன்னெப்போதும் இல்லாததைவிட 45 வீதமானவர்கள் பெண்கள்
- முன்னைய 80 Pam Am சாதனைகள் முறியடிக்கப்பட்டுள்ளன
- முன்னர் 23 பதக்கங்களைப் பெற்ற பிரேசில் நீச்சல் வீரர் தியாகோ பெரேரா இவ்விழாவில் 5 பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளார்.
- சென். லூசியா நாடு முதன்முறையாக 'Pam Am' போட்டியில் பங்குபற்றி தங்கப் பதக்கம் பெற்றுள்ளது.
- கனடாவில் பெண்கள் கூடைப்பந்தாட்ட அணி முதன்முறையாக தங்கப்பதக்கம் வென்றுள்ளது.
- 32 வருட சரித்திரத்தில் பேஸ் போல் விளையாட்டில் அமெரிக்காவை கனடா சுற்றுப் போட்டியில் வென்று சாதனை படைத்துள்ளது.
- மார்க்கம் நகரில் வசிக்கும் Andre de Grasse 1999ம் ஆண்டின் பின்னர் முதன்முறையாக 100 மீற்றர் ஓட்டப்போட்டியை 10 செகண்டுக்குள் முடித்து தங்கப்பதக்கம் பெற்றுள்ளார். மீண்டும் 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் முன்னைய கனடியச் சாதனையை உடைத்து தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார். கனடாவின் அதிவேக ஓட்டக்காரராக தற்போது திகழும் இவர் இனிவரும் போட்டிகளிலும் சாதனை படைக்கும் வல்லமை கொண்டவராகத் திகழ்கிறார்.
- பங்குபற்றிய வீரர்களுக்கு 140,000 வாழைப்பழங்களையும், 100,000 கோழிகளையும் 50,000 மாட்டிறைச்சித் துண்டுகளையும், 20,000 muffinsகளையும் லொப்லோஸ் நிறுவனம் இலவசமாக வழங்கியுள்ளது.
- 1200 Chevrolet வாகனங்களை இந்த நிறுவனம் வழங்கியுள்ளது.
- 4X100 அஞ்சலோட்டத்தில் கனடாவின் நான்கு வீரர்களும் முதல் இடத்தைப் பிடித்தனராயினும் அமெரிக்காவும் ரினிடாட்டும் அதனை ஆட்சேபித்து அந்த வெற்றியை நிராகரிக்கச் செய்தனர். இதனால் நான்கு கனடிய வீரர்களின் தங்கப் பதக்க கனவு நனவாகவில்லை.●

Get more from your home by paying less each month

Ragavan (Raga) Ramanathan AMP
Mortgage Development Manager
Platinum Performer

Scotiabank®  You're richer than you think.®

Tel: 416.579.7533
Fax: 416.352.1464
Email: ragavan.ramanathan@scotiabank.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

HERITAGE Education Funds

**RESP SAVINGS PLAN**
**கல்விச் சேமிப்புத் திட்டம்**

Your are eligible to apply for and Education Savings Grant of up to $7,200 per child

Your savings are more safe and secure

Your can start with a small amount

it's a more flexible plan

**EDUCATION IS A GREAT GIFT FOR YOUR FUTURE GENERATIONS**

உங்கள் பிள்ளைகளின் கல்விக்கான சேமிப்பு உங்கள் எதிர்கால தலைமுறைக்கான முதலீடு

WWW.KERUDAVIL.COM

**INCOME TAX PREPARATION**

Personal Income Tax
Small Business Income Tax
Computerized Returns

Graphic Land - 647. 219. 7576



S.Ganthiy
B.A. Srilanka
Enrollment Officer

416. 841. 1866
416. 955. 9303
E.mail: ganthiy@rogers.com

## மணிக்கட்டில் வலி ஏன்?

சுடுநீர் ஒத்தடம் கொடுக்கலாம். அதைத் தொடர்ந்து மறு கையால் மெதுவாக அவ்விடத்தை நீவி மசாஜ் பண்ணுவது உதவும்.

### முழங்கை மணிக்கட்டு EPL Stretch பயிற்சி

வலியுள்ள பக்கக் கையை முழங்கைப் பகுதியை மடிக்காது, நேராக நீட்டுங்கள். அதேநேரம் பெருவிரலை ஏனைய நான்கு விரல்களும் பொத்தியிருக்குமாறு மூடுங்கள். இப்பொழுது உங்கள் மணிக்கட்டை சின்ன விரல் பக்கமாக படத்தில் காட்டியபடி மெதுவாக மடியுங்கள். அப்போது வலி ஏற்படுவதாக உணர்ந்தால் மேலும் மடிப்பதைத் தொடராது நிறுத்துங்கள். 5 செகண்டுகளுக்கு அந்தளவில் வைத்திருங்கள். வலி அதிகரிக்கவில்லை எனில் 5 முதல் 10 தடவைகள் இதே பயிற்சியைத் தொடருங்கள்

### மணிக்கட்டுப் பயிற்சி

வலியுள்ள பக்கத்தின் முழங்கையை நேராக நீட்டுங்கள். அக் கையின் பிற்புறத்தை மற்றக் கையால் பற்றி அது மணிக்கட்டுப் பகுதியில் முன்புறமாக வளையுமாறு சற்று அழுத்தம் கொடுங்கள். 10 முதல் 30 செகண்டுகளுக்கு அவ்வாறே பிடித்திருங்கள். அடுத்து நோயுள்ள கையின் பெருவிரல் தவிர்ந்த ஏனைய நான்கு விரல்களையும் மற்றக் கையால் உட்புறமிருந்து வெளிப்புறமாகத் தள்ளுங்கள். 10 முதல் 30 செகண்டுகளுக்கு அவ்வாறே பிடித்திருங்கள். மூன்று தடவைகள் இவற்றை திரும்பச் செய்யுங்கள். தினமும் மூன்று தடவைகள் செய்ய வேண்டும்.

### கைலாகுப் பயிற்சி

கைலாகு கொடுக்கும்போது உங்களது மணிக்கட்டு, முன்னங்கை, மற்றும் விரல்கள் ஆகியவற்றின் தசைநார்கள் இறுக்கமின்றி தளர்கின்றன. இது இந்நோய்க்கு நல்ல பயிற்சியாகும். ஆனால் அதற்காக மற்றவர்களின் கைகளை பயற்சிக்காக எதிர்பார்க்க முடியாது. எனவே உங்களது நோயுள்ள கையால் மற்றக் கையைப் பற்றிப் பயிற்சி செய்யுங்கள். கைகளை இறுக்கமாகப் பற்றாமல் தளர்ச்சியாகப் பற்றிக் கொண்டு கைலாகு கொடுப்பது போல மேல் கீழாக சற்று ஆட்டுங்கள். அதேபோல பக்கவாட்டிலும் சில தடவை ஆட்டுங்கள். இது 30 செகண்டுகள் வரை தொடரலாம். மேலும் இரண்டு தடவைகள் செய்யுங்கள். இறுதியாக, ஓய்வு மற்றும் பயிற்சிகளின் பயனாக அப்பெண்ணின் மணிக்கட்டு வலி தணிந்து விட்டது. மீண்டும் அத் தசைநார்களுக்கு அதீத வேலை கொடுக்காது கவனம் எடுப்பதாகச் சொல்லியிருப்பதால் மீண்டும் வலி வராது என நம்பலாம்.●

**The Children's Education Trust of Canada**
**offered to the public by**

**Children's Education Funds Inc.**



10 டாலரிலிருந்து ஆரம்பித்து
7200 டாலர்கள் வரை
கனடா அரசாங்கம் வழங்கும்
நன்கொடையைப் பெற்று
(20 வீத Grant)
உங்கள் பிள்ளைகளதும்
பேரப்பிள்ளைகளதும்
கல்வி வாய்ப்பை
ஊக்குவியுங்கள்.

**சமூக நம்பிக்கையையும்**
**நன்மதிப்பையும் பெற்ற**

சிவா
கணபதிப்பிள்ளை

**அவர்களை அழைத்து**
**விபரங்களைப் பெறுக!**

Siva Kanapathypillai
Dealing Representative

**418 899 6044**

email
s.kanapathypillai@cefi.ca



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ். காந்தி



# வெள்ளிப் பணம்

96

வெள்ளிப்பணத் தொடரில் இம்முறை இளைப்பாற்று சேமிப்புத்திட்டத்திற்கும் (Registered Retirement saving plan) வரிவிலக்குள்ள சேமிப்புத்திட்டத்துக்கும் (Tax free saving account) உள்ள வேறுபாடுகள் மற்றும் அவற்றில் உள்ள நன்மைகள் முரண்பாடுகள் வேறுபட்ட வருமானங்கள் உள்ளவர்களுக்கு எது சிறந்ததாக அமையும் போன்ற விடயங்கள் உள்ளடக்கிய தகவலாக அமைகின்றது.

இளைப்பாற்று சேமிப்புத்திட்டத்தினை ஆங்கிலத்தின் சுருக்கமாக RRSP என அழைப்பதுண்டு. அதுபோல் வரிவிலக்குள்ள சேமிப்பத்திட்டத்தினை TSFA என அழைப்பதுண்டு. இனிவரப்போகும் தகவல்கள் இந்த ஆங்கிலப் பெயர் கொண்டுதான் இருக்கப் போகின்றது.

RRSP சேமிப்பு கணக்கில் பணம் வைப்பிடப்படும் போது அது அவர்களின் வருமானத்தில் இருந்து கழித்து கணக்கிடப்படுகின்றது அவர்கள் வருமானவரி பத்திரம் பூர்த்தி செய்யப்படும் பொழுது.

ஆனால் TSFA அப்படியல்ல. அப்படியானால் இதில் என்ன நன்மை இருக்கின்றது எனக் கேட்டால் வைப்பில் இட்ட பணத்தினை திரும்பபெறும் பொழுது TSFA வரிவி-திப்பது இல்லை. RRSPயில் இருந்து பணத்தினை திரும்பப்பெறும் பொழுது அதற்கு அது உங்களின் வருமானமாக கணக்கிடப்படும். இது ஒரு பொதுவான நடைமுறை.

அப்படியானால் இதில் எது சிறந்தது எனக்கு என்பது உங்கள் கேள்வியாக இருக்கும். ஒவ்வொருவரும் கனடாவில் வேறுபட்ட வருமான நிலையில் உள்ளார்கள். அது மாத்திரமல்ல குடும்ப அங்கத்தவர்களின் தொகை தொழில் வாய்ப்பின் நிரந்தர தன்மை அல்லது நிச்சயமற்ற தன்மை. எதிர்கால திட்டங்கள் போன்ற பல்வேறு விடயங்கள் கருத்தில் கொண்டு தீர்மானங்களை மேற்கொள்ளுதல் சிறந்ததாக அமையும்.

உதாரணமாக வருட வருமானம் $30,000 உழைப்பவருக்கும் வருடம் $70,000 உழைப்பவரையும் எடுத்துக் கொண்டால் RRSP சேமிப்பு $70,000 உழைப்பவருக்கு கூடிய பொருத்தமாக அமையும். காரணம் அவரின் வருமானவரி விகிதம் அதிகமாக இருக்கும். $30,000 உழைப்பவர் RRSP அவருக்கு பொருத்தமாக இருக்காது என்பது இதன் அர்த்தம் அல்ல.

இதனைவிட இவர்கள் திருமணமானவர்களா? 18 வயதுக்குட்பட்ட பிள்ளைகள் எத்தனை? இவர்களில் தொழில் வாய்புகளின் நிரந்தர தன்மை? இவர்களின் தற்போதைய வயது போன்ற காரணங்களையும் கொண்டுதான் ஒருவருக்கு எத்தகையது சிறந்தது என்கின்ற சரியான முடிவுக்கு வரமுடியும். தகவல்கள் பொதுவானவை. தெரிவுகள் தனிப்பட்டவர்களுக்கு வேறுபட்டு அமையும்.

RRSPயில் பெறப்படும் சலுகைகள் நிரந்தரமற்றது. காரணம் அவற்றை மீளப்பெறும் பொழுது அது வருமானமாக கணிக்கப்படும் என்பது சிலருடைய வாதமாக அமைகின்றது. ஆனால் இன்று உலகமயமாக்கப்பட்ட பொருளாதார சூழலில் எவருக்கும் எந்த தொழிலும் எதிர்காலத்தில் நிலைத்திருக்கும் என்பதற்கான உத்தரவாதம் இல்லாத காரணத்தால் கூடிய வருமானம் உழைப்பவர் வேலைவாய்பை இழக்கின்ற சூழ்நிலையில் அவரை பாரிய பொருளாதார சிக்கலில் இருந்து காப்பாற்ற அவருடைய RRSP சேமிப்பு உதவி செய்யும். வருமானம் இல்லாத சூழலில் RRSPயில் இருந்து பணத்தை மீளப்பெறும் பொழுது அவர் மிகவும் குறைந்தளவு அல்லது துப்பரவாக வரி செலுத்தாமல் கூட தப்பிக்க முடியும். அது அவர் எவ்வளவு பணத்தினை மீளப்பெற போகின்றார், அவரில் தங்கி வாழ்பவர்களின் எண்ணிக்கை போன்ற காரணிகள் இதனை தீர்மானிக்கும். (33ஆம் பக்கம் வருக)

R & S AUTO SALES
Top Quality Used Car Dealer


வங்கியால் உடமைப்படுத்தப்பட்ட
வாகனங்களை விற்பது எமது விசேட திறன்

36 வருட அனுபவம்



HONDA
TOYOTA
GM-MINI VANS

We Sell Bank Repossed Cars
Accident Vehicle Repair
Computerized Painting
Motor Vehicle Accident
Traffic Tickets



தமது சிறப்பான சேவையால் அதி உயர் விருது பெற்ற
Radha


R & S Auto Sales Inc.
Radha Motor Inc.
3030 Markham Road
Scarborough, ON
416-412-3838
416-836-5825

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NKS Draperies & Blinds

210 Silver Star Road, Unit. 825
(Midland & Finch) Scarborough, ON

**416 321 6420**





- **Vertical blinds**
- **Venetian blinds**
- **Draperies**
- **Curtains**
- **Shutters**

உங்கள்
இல்லங்களை
மாளிகையாக்கிட

அழையுங்கள்
கேதா

தமது சிறப்பான சேவையினால்
தகுந்த விருதுகளைப் பெற்ற நிறுவனம்

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

தமிழர் தகவல் பிரதிகளை மாதாந்தம்
முத்திரைக் கட்டணம் செலுத்தி
தபாலிலும் பெறமுடியும். விபரங்களுக்கு

416 920 9250
e-mail: tamilsinfo@sympatico.ca

## ALL COUNTRIES TAMILS YELLOW PAGE

**CANADA & INTERNATIONAL MEDIA, NEWS, WEBSITE
BUSINESS ADVERTISEMENTS & DIRECTORY**

**BIRTHDAY WISHES & ANNIVERSARY :-** Wedding & Business

**ARANGETRAM :-** Bharatham, Mirudangam, Veena & Etc... - **MATRIMONIAL :-** Marriage Broker Services

**JOB AGENCY :-** All Kinds of Employment Services - **FUNERALS :-** Obituaries & Etc...

2296 EGLINTON AVE, EAST @ BIRCHMOUNT RD UNIT 3C LOWER LEVEL SCARBOROUGH - TORONTO - ONTARIO - M1K 2M2 - CANADA
TEL: 416 644 7273 - TEL & FAX: 416 613 2919 - MOB: 416 752 4444 WEB: WWW.TAMILSYELLOWPAGES.COM E-MAIL: TYP@TAMILSYELLOWPAGES.COM

**WWW.ENGLISHYELLOWPAGE.COM - WWW.ASIANSYELLOWPAGE.COM**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகவே பரமநாதன் (ஆழ்கடலான்)



# 'கம்பலை-கவலை-கண்ணீர்'

'சிந்தைத் துயரென் றொருபாவி
சினந்து சினந்து போர்முயங்கி
நிந்தைக் கிடமாய்ச் சகவாழ்வை
நிலையென் றுணர்ந்தே நிற்கின்றேன்
எந்தப் படியுன்னருள் வாய்க்கும்
ஏனக்கப்படி நீ அருள் செய்வாய்
பந்தத் துயரற்றருள் வார்க் கெளிய
புரமானந்தப் பழம் பொருளே!'

–தன்னை ஒருவர்–
தாயுமானவர் பாடல் 7

கவலை – துன்பம். கண்ணீர் இரு வகை. ஒன்று இன்பக் கண்ணீர்: மற்றது துன்பக் கண்ணீர். முதலாவது இனிக்கும், மற்றது கரிக்கும். இன்னுமொன்று இருக்கிறது. அது நீலிக்கண்ணீர். மனித இனம் துன்பம், துயர் அடைகிறது. துன்பமும், துயரமும் ஏற்றுக் கொண்டு சுகம் பெறும் கருணை வெள்ளம் அன்னை. இந்தக் கஷ்ட நஷ்டங்களை விலங்குகளும் அனுபவிக்குமாம். இதை மனித உள்ளங்கள் காட்டிக் கொடுக்கின்றன. எனவே பெருந்தகை வள்ளுவனார் 'இடுக்கண் வருங்கால் நகுக' என்றார். நகுதல் – சிரித்தல். இலகுவான செயலா இது. துன்பத்தால் வாடும்போது சிரித்து அடக்கி விடுவது மனிதத்தால் முடியுமா? அப்ப என்ன செய்வது. மடை மாற்றம் செய்து மனதை வழிநடத்து என்பது உட்பொருள். எல்லையற்ற கவலை மனித குலத்தை என்ன செய்யும்? சிப்பிலி ஆட்டும் அன்றோ? எப்படியெனினும், விம்மி, விக்கி அழவே செய்வானன்றோ!

எப்போ நகைப்பான். அளவற்ற துள்பம் ஒருவரை, ஒருத்தியை என்ன செய்யும். திகைப்பைக் கொடுக்கும். இப்படி வந்தவேளைதான் மணிமொழியார் செய்வதறியாச் சிறுநாயேன் என்றார். மனிதம் எம்மட்டு. உள்ளம் வெதும்பும், விம்மும், மனநோக்காடு ஏற்படும். எப்போ சிரிப்பு வரும். அடுத்தடுத்து கவலை தொடர்கதை ஆகும்போது பார் உனக்குப் பாடம் படிப்பிக்கின்றேன் என்று சிரிக்கின்றான். அதன் வலிவை குறைக்கின்றான். கவலை இல்லாதவன் இல்லையாம். சிவலை சிவபெருமான். முதலில் நாம் நம்மை உறுதிப்படுத்த வேண்டும். மனஉறுதி, தைரியம், அசையா மனசு என்பவற்றை உள்வாங்க வேண்டும். எதற்கும் வளையாது அவற்றை இயமன் உலகத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும். சஞ்சலம் – துன்பம். வெண்புறாவே சஞ்சலம் கொள்ளாதே.

எனவே புதிய யுக்திகள் மூலம் நம்மை நெறிப்படுத்தி வாழ்வதே இன்றைய நிலைப்பாடு. கவலை இல்லா வாழ்வே தேவை. வெற்றி காண்போம்.

நாம் எதுவரினும் பீதியடையக்கூடாது. அச்சம் தவிர் என்றார் பாரதி. நீண்ட கவலையை வெற்றி கொள்ள (றடைட ிழறநச) உறுதியே வேண்டும். கோபத்தையும் புறம்காண வேண்டும். இதை ஒரு பாடலிலே ஒருவர் பாடுகின்றார்.
'இடுக்கண் வந்து உற்றகாலை, எரிகின்ற
விளக்குப் போல, நகுக. நக்கவேளை னி அஃதே
இடுக்கணை அரியும் இரும்பு வாளாம்

எம் இல்லத்தில், இயற்கையின் விளைவாய் மரணம் தொடர்கிறது என வைப்போம்
என்ன செய்வது? தொடர்ந்து ஒப்பாரி வைப்பதா. இப்படியான வேளை என் அம்மா என்ன சொல்வா தெரியுமா? இரும்பு மனத்தோடு, ஒருவர் இறந்தால் எட்டு நாள் அழுகை. ஒரு மாதத் துடக்கு என்று ஓர்மமாய்ச் சொல்லி நம்மைப் பலப்படுத்துவார். மனோவன்மையோடு எதிர்ப்பதும் மேலான வழியாம். எதிர்த்துப் போராடுவதே வழி. ஆக மனவன்மை தேவை. உத்திகளை மாற்றிப்பார். சஞ்சலம் தீர்த்து இன்பமுற ஒரு வழி காட்டு எனப் பட்டினத்தார் வெண்ணிலாவிடம் கேட்டார். மனதில் உறுதி வேண்டும் என்றார் பாரதி. அரிவாளைக் கொண்டு அரிந்தாலும் வைராக்கியம் உள்ள நெஞ்சு வேண்டும் என்றார். அச்சம் தவிர். முன்னோடிகளாய் வாழ்வோம்.

வாழ்நாள் முழுதும் கவலையும் கம்பலையுமாய் வாழ்வது துன்பம். வாழ்வில் ஏற்படும் சுக துக்கங்கள், இன்ப துன்பம், வறுமை செம்மைகள் நம்மைப் பெரிதும் பாதிக்கின்றன. இன்றைய உலகம் சுருங்கிப் போனது என்றாலும் யுத்த கெடுபிடிகளாற் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. எதுவரினும் பல்லாற்றானும் பாதிப்பு அடைந்து உள்ளோம். நீண்டதோர் வலைப்பிரதேசம் எம்மைத் தாண்டிப் போய்விட்டது. எனவே மாறுபட்ட உலகின் பிரதிநிதிகளாய் வாழும் காலம் மாற நாமும் மாறிப் போனோம். எல்லாமே அந்த ஆண்டவனின் பாதையிலேதான்.

நாம் எதுவரினும் பீதியடையக்கூடாது அன்றோ. நீண்ட கவலையை வெற்றி கொள்ளக் கவலைப்படாமல் போராட வேண்டும். கோபத்தைப் புறங்காணுவதே தக்க வழியாம். இன்னோர் பாடலும் இதையே வற்புறுத்துகிறது.

'இடுக்கண் வந்து உற்றகாலை
எரிகின்ற விளக்குப் போல, நகுக' நாம் நக்கபோது துன்பத்தை வெல்ல இதுவே மேலான வழியாகும். உதாரணத்துக்கு எம் வீட்டில் இறப்புத் தொடரின் என்ன செய்வது. எனவே கவலைக் கடலை வெல்ல சிரிப்பதே மேலான வழியாம். மனோவன்மையோடு எதிர்த்துப் போராடுவதே மேலாம். கவலை இல்லாதவன் சிவலையென்பர். சிவலை – செந்நிறமுடையவர் சிவபெருமான். முதலில் நம்மை நாம் உறுதிப்படுத்த வேண்டும். மனஉறுதி, தைரியம் என்பவற்றை மனதிற் கொண்டு எதற்கும் புறம்கொடாமல் வாழ்வை எடுத்துச் செல்வதே மேலாம்.

சஞ்சலம் – துன்பம் – மனத்தோடு தொடர்புடையது. சிவபிரான் பல வகையான கவலைகளையே எதிர்த்து வென்றவர். நாமும் முன்னின்று வெற்றி காண்போமாக.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Ten of Canada's best moments During the Pan Am Games

1. Damian Warner sets Canadian decathlon record. Putting up four personal bests — in the 100 metres, the long jump, the discus and the 1,500 — Warner grabbed the Canadian and Pan Am record with 8,659 points.

2. Emily Overholt turns disappointment into victory. The 17-year-old swimmer was disqualified for an illegal turn in the women's 400-metre individual medley. But Overholt did not sulk nor did she quit, and recovered one day later to set a new Pan Am record (4:08.42) to win the 400-metre freestyle gold.

3. Andre De Grasse won gold in the men's 200-metre dash at the Pan American Games on Friday. The Markham, Ont., native finished in 19.88 seconds, a Canadian and Pan American record. He is the first Canadian to run a sub-20 seconds 200-metre race.

4. Kia Nurse, the golden girl of the Canadian women's basketball team, earns spot as flagbearer at the Pan Am Games closing ceremony Sunday night. Nurse was the leading scorer of the women's gold medal-winning basketball team with a total of 68 points. She played a team-high 128 minutes over the course of five games.

5. Canadian gymnastics crowns a new queen, Ellie Black. The 19-year-old gymnast from Halifax wrapped up her dominant performance at the Pan Am Games by receiving two gold medals for her commanding, acrobatic routines on the balance beam and in the floor exercise.

6. Canada's water-skiing siblings take home the gold. Whitney McClintock went from torch bearer to gold standard at the Pan Am Games. McClintock won the 65th gold medal for Canada, her second, breaking Canada's gold-medal record. Her brother Jason McClintock took home a gold medal too.

7. Melissa Bishop's victorious finish line goes viral. A video of her crossing the finish line began circulating on the internet. Arms rising, smile widening, both hands waving as she edged American Alysia Montano to capture Pan Am gold in the 800 metres.

8. Canada won a 5-3 victory against Brazil in the semi-final of the men's field hockey tournament at the Pan Am Games. The win clinched a berth in 2016 Rio Olympics for Canada.

9. Jessica Phoenix took home silver for equestrian, and was part of Canada's bronze-medal winning team. The Uxbridge native is just recently back in the saddle after breaking three ribs, her clavicle and her sacrum along with requiring surgery to repair her liver after a tumble in May.

10. Canada takes gold in America's national pastime. Canada defended its 2011 gold medal in baseball from the Pan Am Games in Guadalajara against the U.S., eventually beating the American team 7-6 in a teeth-clenching game that went into extra innings.

| | Country | Gold | Silver | Bronze | Total |
|---|---|---|---|---|---|
| 1 | United States | 103 | 81 | 81 | **265** |
| 2 | Canada | 78 | 69 | 70 | **217** |
| 3 | Brazil | 41 | 40 | 60 | **141** |
| 4 | Cuba | 36 | 27 | 34 | **97** |
| 5 | Colombia | 27 | 14 | 31 | **72** |
| 6 | Mexico | 22 | 30 | 43 | **95** |
| 7 | Argentina | 15 | 29 | 31 | **75** |
| 8 | Venezuela | 8 | 22 | 20 | **50** |
| 9 | Ecuador | 7 | 9 | 16 | **32** |
| 10 | Guatemala | 6 | 1 | 3 | **10** |
| 11 | Chile | 5 | 6 | 18 | **29** |
| 12 | Peru | 4 | 4 | 6 | **14** |
| 13 | Dominican Rep. | 3 | 11 | 10 | **24** |
| 14 | Jamaica | 3 | 4 | 2 | **9** |
| 15 | Trinidad&Tobago | 3 | 3 | 2 | **8** |
| 16 | Bahamas | 2 | 2 | 2 | **6** |
| 17 | Puerto Rico | 1 | 1 | 13 | **15** |
| 18 | Uruguay | 1 | 1 | 3 | **5** |
| 19 | Saint Lucia | 1 | 0 | 0 | **1** |
| 20 | Barbados | 0 | 1 | 2 | **3** |
| | Bolivia | 0 | 1 | 2 | **3** |
| | El Salvador | 0 | 1 | 2 | **3** |
| | Paraguay | 0 | 1 | 2 | **3** |
| 24 | Panama | 0 | 1 | 1 | **2** |
| 25 | Antigua&Barbuda | 0 | 1 | 0 | **1** |
| | Grenada | 0 | 1 | 0 | **1** |
| | Honduras | 0 | 1 | 0 | **1** |
| 28 | Bermuda | 0 | 0 | 1 | **1** |
| | Costa Rica | 0 | 0 | 1 | **1** |
| | StKitts&Nevis | 0 | 0 | 1 | **1** |
| | StV&Grenadines | 0 | 0 | 1 | **1** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெள்ளிப் பணம்..


கனடாவில் வருமானம் குறைவாக உழைப்பவர்கள் முதல் குறிப்பிட்ட $30,000 வருமானம் கொண்ட ஒரு குடும்பத்தவருக்கு மனைவி, இரண்டு பிள்ளைகள் இருக்கின்ற சூழலில் அவருக்கு RRSP சேமிப்பு பயன்படப் போவதில்லை என்று துணிந்து கூறமுடியும். அவர்கள் சேமிக்கும் பணம் சிறிய தொகையாக அமைந்தாலும் இவருக்கு TSFA சேமிப்பு தான் சிறந்ததாக அமையும். காரணம் இவர் சேமிப்புக் கணக்கு உழைக்கும் வருமானத்துக்கு 100 சதவீத வரிவிலக்கு உண்டு.

எனவே வருமானம் கூடியவர்களில் முதல் தெரிவாக கட்டாயம் RRSPயும் இரண்டாவது தெரிவாக TSFAயும் இருக்கலாம். குறைந்த வருமானம் உடையவர்களின் சேமிப்பு TSFA முதல் தெரிவாகவும் இருக்க முடியும்.

இந்த இரண்டு வகை சேமிப்பு கணக்குகளுக்கும் ஒவ்வொருவரும் வருடத்துக்கு ஆகக்கூடியது எவ்வளவு பணம் போட முடியும். அதற்கான கட்டுப்பாடுகள் கணக்கீட்டு முறைகள் எவ்வாறு உள்ளது. இதற்கான வயது எல்லைகள் போன்ற விடயங்கள் அடுத்த இதழில் தொடரும்.●












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடு, வியாபார நிலையங்கள் வாங்க, விற்க..

## அடமான (Mortgage) ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்






கனடியத் தமிழர் சமூகத்தில்
நம்பிக்கையான ஒரு முகவர்

**Kamal** Navaratnam

Sales Representative

Direct: **416-671-4815**

E mail:kamalhomesale@gmail.com

**HomeLife/Future Realty Inc.**

Brokerage

205-7 Eastvale Drive

Markham ON, L3S 4N8

Bus: (905) 201-9977


Fax: (905) 201-9229

Independently Owned and Operated

***Trust and reliable services***




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 1206-0585


# FREE ! Real Estate Classes




## Successful Real Estate Office With
## Over 300 Salespeople




2012 2011 2010

★No Franchise Fees ★No Monthly Fees ★No Desk Fees

## International Award Winning Office

### Top 5th HomeLife Office In Canada-2012

- Atractive Commission Split.
- Over 300 Salespersons.
- Daily Training, Full Services Office
- 24 Hrs Access to the Office
- Office Open 7 Days/ Week

HOMELIFE HIGHER STANDARDS



**HOMELIFE /FUTURE REALTY INC.,** Brokerage
205 -7 Eastvale Dr., Markham, Ontario, L3S 4N7
**Bus: 905.201.9977 | 416.264.0101**

*Based on TREB data: 2012. (does not include independent or other franchisors). ©2012 HomeLife Realty Services Inc. All Rights Reserved.Each Office is Independently Owned and Operated. Not intended to solicit Agents or Brokers currently under contract.

*INDEPENDENTLY OWNED AND OPERATED*

**Selva Vettyvel**
*Broker of Record*

**Tel:416-568-4301**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org